162 A

7

வைத்திய வாகடம்

அகத்தியர் மருத்துவம்.

~~162 ஏ. அகத்தியர் வைத்திய வாகடம்~~ தி.ப.வ.15.

முதல் ஏடு விடுபட்டுள்ளது.

1. முதல் 25 முடிய விடுபட்டுள்ளது.

26. நீர்க்குறி:

ஓங்கிய வாதத் தோர்க்கு
நீர்விழும் குணமு ரைக்கில்
பூங்கொடி கறுத்துநொந்து
செறுத்துடன் பொருமி வீழும்
பாங்குறும் பித்தத் தோர்க்கு
பசியநீர் விழுந்து காட்டும்
ஏங்கவே சுருக்க தாக
எரித்துமஞ் சளித்து வீழும்

வாத, பித்த உடம்பினோர்க்கு உண்டாகும் நீர்க்குறி இங்கு விளக்கப்படுகிறது. சிறுநீர் கறுத்து, நொந்து, சிறுத்து, பொருமி வீழும். பித்த உடம்பினோர்க்கு நீர் சிறிது பசுமை கலந்ததாய் வீழும். குறைவாக வீழும். இந்நீர் எரிச்சலுடன் வீழும். இந்நீர் மஞ்சள் நிறமாகக் காணும்.

27. வீழுமே சிலேற்பமத் தோர்க்கு
நீர்வீழுங் குணமு ரைக்கில்
நாளுமே வெளுத்து ழைந்து
நயம்பெற வீங்குங் கண்டாய்
வாள்விழி மானே தேர்ந்த
மானிடர் தமக்குத் தானே
கோள்பல வாகி வீழு
மெல்லுதாள் குறித்துக் கொள்ளே — 2

சிலேற்பம உடம்பினோர்க்கு நீர் வெளுத்து, உழைந்து வீழும். நீர்க்குறியில் வீக்கங்காணும். இவ்வாறு சிறுநீர் இறங்குவது உடம்பிற்குத்தக மாறுபட்டு வீழும் என்று அறியலாம்.

சுர உற்பத்தி:

28. சுரந்தானும் வியாதிக் கெல்லாம்
துறையென வீற்றிருக்கும்
கரந்தானும் பிலத்து மேவுங்
காலற்குச் சமனாய்ப் பேசும்
அரந்தானும் தக்கன் யாகம்
அழித்திடும் போது வந்த
வரந்தானும் நெத்திக் கண்ணில்
பிறந்தது சுரம்நல் மானே — 3

வியாதிக்கெல்லாம் துறையாக விளங்கும் சுரம் வந்துவிட்டால் அது உயிர்க்கு இறுதி ஆகிவிடும். இச்சுரமானது ~~தங்கள்~~ தக்கன் யாகத்தைச் சிவன் அழிக்கும்போது நெற்றிக்கண்ணைத் திறந்தாலே அந்தக் கண்ணில் இருந்து தோன்றியதுதான் சுரம்.

29. ஆய்ந்ததோர் தரமு மேழு
வகையுண்டு அணங்கே கேளாய்
மாயமாம் வாத பித்த
சிலேற்பமம் வன்மையாகத்
தாயமாம் தேர்ந்த பூதம்
சீரணம் சன்னிதோஷம்
பாயகயல் விழியி னாளே
பலவிஷ சுரமு மாமே — 4

சுரங்களில் ஏழுவகையுண்டு. வாத பித்த சிலேட்டும சுரங்கள், சீரணம், சன்னி, தோஷம், விஷசுரம் என அவை ஏழாகும்.

30. உண்டியில் குளிக்கும் நீரில்
ஓங்கிய மலத்தில் காயம்
மிண்டிய வேலை செய்யும்
வேதனை யதனில் தானே
மண்டிய காப்பலந் தானும்
வறண்டதில் மாத ராலும்
தொண்டையின் கனிவா யாலே
சுரமது தோன்றுந் தானே — 5

மிகுத்துண்ணல், குளிக்கும் நீர் மாசுபடல், மலம் குடலில் தங்குதல், மலக்குடல் காயம் ஏற்பட்டிருத்தல், மிகுதியான வேலைப்பளு, கபால வறட்சி, மிகுந்த பெண்போகம் இவற்றால் சுரம் ஏற்படும்.

31. சுரமது தோன்று மன்று
பட்டினி கிடந்த தூயதாய்
பரிவுடன் இரண்டாம் நாளில்
பல்லது விளக்கி நாக்கு
வரிசையாய் விளிவென் னீரை
வாங்கியே முகங்கை பூசி
சிரசினில் வேட்டி கட்டி
இடைக் கைகீழ்ப் படுக்கச் செய்யே — 6

சுரம் தோன்றிய அன்று பட்டினி கிடந்து இரண்டாம் நாளில் பல் விளக்கி நாக்கு வழித்து, வெந்நீர் கொண்டு முகம், கைகால் கழுவி, தலையினில் வெள்ளைத் துணியை இறுக்கி கட்டி இடக்கையை கீழே வைத்துப் படுக்கச் செய்யவும்.

32. செய்யதோர் மூன்றாம் நாளில்

சிறப்புடன் எழுந்திருந்து

துய்யவே தேற்றான் கொட்டை

பாங்குட னொன்று தின்று

உய்யவே நாலொன்றாய்க் காய்ந்த

தண்ணீ ருள்ளுக்குக் கொண்டு

துய்யநூ லங்க ளங்கள்

துடங்கிடத் தோஷம் போமே — 7

இதனைத் தொடர்ந்து மூன்றாம் நாளில் சிறப்புடன் எழுந்து விடவும். பின் தேற்றான் கொட்டை ஒன்றைத் தின்று, நன்கு கொதித்து வடிகட்டிய தண்ணீரை பருகக் கொடுக்க தோஷங்கள் போகும்.

33. தோஷமே போகு மருசில்

சுக்குக் கஞ்சி ஏழுநாள்

தோடு மூன்று நா ளவுசதம்

கொண்டால் கா . . . . . . . சுரங்கள்

– – – – – – – – – – –

விளவே மருந்து கொண்டு

கறிவகை விரும்பிக் கொள்ளே — 8

சுரதோஷம், அருசி இவை நீங்க சுக்குக் கஞ்சி காய்ச்சி ஏழுநாள் பருகக் கொடுக்க வேண்டும். அதற்குரிய மருந்து மூன்று நாட்கள் கொள்ள சுரங்கள் நீங்கும். மருந்து முடிந்தால் காய்கறிகளை உண்ணலாம்.

பாடல் எண் ஒழுங்காகத் தரப்பட்டு DTP செய்யவும்

34. கருத்தில்லான் கிழவன் பாலன்
கண்ணோந் தோன்றி சார்ந்தொன்
நரைத்திருங் கசரோ கத்தோன்
நினைத்தவன் வழிந டந்தோன்
உரைத்த வெற்ப பிணிவேந்தர்க்கு
முஜுசுரம் வந்து தோன்றிப்
பருத்தெழுங் கொங்கை மாதே
பட்டினி இடலா காதே 9

கிழவர், பாலர், கசரோகத்தோர், வழிபோக்கர் போன்ற எவர்க்கும் சுர நோய் தோன்றலாம். சுரம் வந்துள்ள போது திரவமாகவே உணவை நிறுத்தாமல் உட்கொள்ள வேண்டும் என்பது கருத்து.

தோடம் வரும் வழி

35. ~~தோஉடம் வருமிட வட்சணம்~~
வாசமிகு பூப்பருகு சந்தனம் சாந்து
மருவு பாக்கிலை சிவப்புக் கொடிச்சீலை
பாசமிகும் நெய்பாலோ டெண்ணை
பருகுநல்ல வெல்லமொடு பனையின் வெல்லம்
ஆசைமிகும் பெண்மோகம் பட்டுச் சீலை
அகற்றிடுவர் இத்தனையும் அறிவுள் ளோர்கள்
தூசணியும் முலைமாதே செப்பக் கேளாய்
சுத்தினமேல் தோஉஷம்வரும் சொல்லி னோமே 10

சந்தனம், சாந்து, வெற்றிலைப்பாக்கு, சிவப்புக் கொடி சீலை, நெய், பால் ,எண்ணெய், நல்லவெல்லம்,பனைவெல்லம், பெண்மோகம்,பட்டுச்சேலை இவற்றை அறிவுமிக்கோர் சுரம் வரும் காலங்களில் நீக்கி விடுவர்.

36. சிவந்த சீலை புதுப்புடவை
செருத்தும் பாக்கு நெய்வெல்லம்
சுகந்தங் காற்று கோவித்தல்
துய்ய தயிர்நெய் பால்பஞ்சுமெத்தை
யுகந்த மின்னாரருத் பாலா நீறு
நாக்கு யடித்த முதல்
விழுந்த சிரசில் முழுகுவதுங்
கடிண சுரத்துக் காகாதே 11

சிவப்பு வண்ணச் சேலை, புதுச்சேலை, பாக்கு, நெய், வெல்லம், வாடைக்காற்று, கோபங்கொள்ளல், தயிர், நெய், பால், பஞ்சு, மெத்தை இவற்றைத் தவிர்ப்பதும், தலை முழுக்கு இல்லாமல் இருப்பதும் சுரத்திற்கு நல்லது.

37. சுரம்வீழில் மூன்று னாளஞ்
சாறேழில் தோஷம் வந்தால்
பரிந்ததொரு மருந்து செய்து
பார்க்கவும் வேண்டாஞ் சொன்னேன்
அரந்தரு மேழு நாளைக்
கப்புறம் தோஷம் வந்தால்
நிரந்தர மாகத் தீரும்
நிச்சய மென்று காணே 12

சுரம் வந்தால், மூன்று நாளில் குணமாகும். சுரத்தோடு 5,6,7 ஆம் நாட்களில் தோஷம் வந்தால் அதற்குரிய மருந்தைச் செய்து பார்க்கவும் வேண்டாம். அவ்வாறன்றி ஏழு தினங்கட்குப் பிறகு தோஷம் வந்தால் நிரந்தரமாகக் குணமடையும் என நம்பலாம்.

(38). வாத சுரத்தின் குணம்:

வாத சுரத்தின் குணங்கேளீர்
    வயிறு சிறுக்கல் குளிரிருமல்
போத நடுக்கல் கீழ்முதுகு
    பொருத்துங் கைகா லதுகுடைதல்
காதத் தண்ணீர் மிகத்தேடல்
    கருதுந் தலைநோ கட்டுடனே
மீது போகு மலசலங்கள்
    மிகவும் கடுக்கும் மெல்லியரே 13

வயிறு சிறுக்கும், குளிர், இருமல், நடுக்கல், கீழ்முதுகு, பொருத்து, கைகால், ~~இவற்றில் ஏற்படும்~~ குத்தல், அதிதாகம், தலைநோக்காடு, மலசலங் கழியும்போது கடுத்தல் இவை வாத சுரத்தின் குணம்.

39. பித்த சுரத்தின் குணம்:

பித்த சுரத்தின் குணங்கேளீர்
    பித்தது வெகுவாய் நித்திரைபோம்
யுத்த மலமும் மிகச்சிவந்து
    யுரைக்குஞ் சிறுநீர் சிவந்தவ்வும்
சத்தி யெடுக்கு மூர்ச்சைவரும்
    தாக மெடுக்குந் தளர்ந்துவரும்
மெத்த நடுக்கும் வாயுவரும்
    விக்க லெடுக்கும் மெல்லியரே 14

பித்த சுரம் உடையோர் மிகுதியாகத் தூங்குவார்கள். சிறுநீரும், மலமும்சிவந்து கழியும், வாந்தி, மூர்ச்சை தாகமெடுத்தல், உடல் தளர்ச்சி, நடுக்கம், வாயுலரிதல், விக்கல் ஆகிய குணங்களைக் கொண்டிருப்பர்.

40. சிலேற்றும சுரத்தின் குணம்:

வானீர் சேர்த்து உடம்புவல

வர்ணமாகும் வலஞ்சல மடைக்கும்

தானே குளிர்ந்து மிகவெதுப்பும்

தரியா திரும தாவுண்டாம்

. . . . . . . . . .

சிறந்த மூக்கில் நீர்பாயும்

வானோ விழியார் சிலேற்றுமமாம்

வந்த சுரத்தின் வகையாமே 15

உடம்பு நிறம் மாறும். மல சலம் அடைத்துக்கொள்ளும். உடல் தானே குளிர்ச்சி அடையும். பின் வெதுப்பை உண்டாக்கும். மூக்கில் நீர் பாயும். இவை சிலேற்றும சுரத்தின் குணங்களாகும்.

41. மற்றும் 42. விடுபட்டுள்ளது.

43. தும்யுடல் சிக்கென்றல் மலஞ்சிக் கென்றல்

தோகையரை யண்டாமல் தராதி யோட்டல்

பெய்யநாடி மிகவுரைத்தல் புதல்வர் போற்றல்

டிடைவெள்ளம் புனலே காணல்

மையமருவூந் தலையுமயிர் நீடிருத்தல்

வருந்தாதே யுண்டியுடன் வாழ்வ தாகி

செய்யுமலர் திருமாதே யிக்கு குணங்கள்

சிலேற்றுமத்தின் குணமிதென்று செப்பலாமே 16

உடல் சிக்கென்று இருத்தல், மலம் சிக்கிக் கொள்ளுதல், பெண்போகத்தில் விருப்பம் இல்லாமை, நாடிகள் வேகமாகத் துடித்தல், தலைமயிர் நீட்சி போன்றவை சிலேற்றும உடம்பினோர் குணங்களாகும்.

4/4. <u>நாடிக்குறி</u>

ஓடிடும் நாடி பார்க்கும்

உண்மையே உரைக்கக் கேளாய்

ஆடவர் வலக்கை நாடி

அரிவையர் யிடக்கை நாடி

பாடமாய்த் தேடு நாடி

பரிவுடன் பார்க்க வேணும்

ஊடறிந் துறைக்கும் நல்ல

உத்தம வயித்திய னாமே 17

மனிதனின் ஓடும் நாடியின் நிலையை இப்பாடல் விளக்குகிறது. அவ்வாறு நாடி பார்க்கும் போது ஆடவர்க்கு வலக்கை நாடியும், மகளிர்க்கு இடக்கை நாடியும் பார்த்து நாடியின் குறி உணர்ந்து அறிவது மருத்துவர் கடன்.

45. சொல்லிய வுந்தி கீழே

சுழித்ததோ ரெழுத்தைப் பற்றி

யெல்லையிற் சிறந்த நாடி

எழுபத்தீ ராயி ரத்தில்

அல்லதோ ரீசர் பாதம்

வணங்கியே யோடி நிற்கும்

நல்லதா மூன்று நாடி

நயந்துநீ ருணர்ந்து கொள்ளே 18

உந்திப் பகுதியின் கீழ் மனிதனுக்குள் ஓடும் நாடிகள் எழுபத்து இரண்டாயிரமாகும். அந்த எழுபத்திரண்டாயிரத்துள் ஈசன் பாதம் வணங்கி ஓடிநிற்கும். சிறப்பு நாடிகள் மூன்று என உணர்ந்து கொள்க.

46. அருமறை நூலை யாய்ந்து

அங்கையில் நாடி பார்க்கில்

பெருவிர லங்கு லத்தில்

பிடித்துடன் நடுவே தொட்டால்

ஒருவிர லோடில் வாதம்

இருவிர லோடில் பித்தம்

திருவிரல் மூன்று மோடில்

சிலேற்பும நாடி தானே 19

அரிய நாடி நூல்களிலே சொல்லப்பட்ட நிலை அறிந்து ஆய்ந்து மணிக்கட்டில் நாடி பார்த்தால் சிறப்பு பெருவிரல் அங்குலத்தில் பிடித்து நடுவில் தொட்டு நாடியின் தன்மையை உணரவும். மூன்று விரல்களினால் நாடியை அறியும் போது ஒரு விரலில் மட்டும் ஓடினால் வாதம், இருவிரலில் ஓடினால் பித்தம், ~~மூன்று விரல்களும்~~ மூன்றாம் விரலிடத்தில் ஓடினால் சிலேற்பமம் என அறியவும்.

47. அன்னமே கோழி ஓணான்

மயிலென நடக்கும் வாதம்

பின்னையூ ராமை அட்டை

பெருத்திடில் பித்த மாகும்

சொன்னதேன் மொழியி னாளே

சுற்றிய தவளை பாம்பு

அன்னமே அய்ய மென்று

யியம்பினார் வேதந் தானே 20

அவ்வகை நாடி அன்னம், கோழி, ஓணான், மயில் போல நடந்தால் வாதம் எனவும், ஆமை, அட்டைபோல் நடந்தால் பித்தம் என்றும் தவளை, பாம்பு, அன்னம் போல் நடந்தால் ஐயம் என்று வேதம் இயம்பும்.

48. அங்கை முறுக்கி நெட்டி

யடவுடன் மையை வாங்கி

செங்கையைப் பிடித்தி முத்தத்

திறமுடன் பார்க்கும் போது

பங்குற பருத்த நாடி

மெய்யவே ஓடு மாகில்

மங்கை தனை நோகச் செய்து

வாதமாம் நாடி தானே 21

அகங்கையாம் உள்ளங்கையை மடக்கி நெட்டி வாங்கியபின் மணிக்கட்டில் நாடியைச் செம்மையாகப் பார்க்கும்போது பருத்த அந்த நாடி மெதுவாகச் செல்லுமாகில் வாதம் என்று அறியலாம்.

48. உற்றதோர் நாடி தானும்
(எ)

நொந்துயர்ந்து பற்றி யோசல

பித்தமாம் நாடி யென்று

விசக்கற வறிந்து கொள்க

மெத்தவே இரண்டு தாங்க

விரைவுடன் தெறிக்கு மாகில்

சித்தமே யறிநீ ரய்யா

சிலேற்பன நாடி தானே 22

~~வாத நாடி உடம்பில் வளவுற்றிருக்குமானால் நோய்களைத் தந்து உடலை ஊனமாக்கிவிடும். பித்தநாடி மிகுந்த வலுவுடன் நிற்குமாகில் கடினமான காய்ச்சலை அது ஏற்படுத்தும்.~~

நாடியானது நொந்த நிலையில் உயர்ந்து ஓடுமாகில் பித்தம் என்று சந்தேகமின்றி அறியவும். அந்நாடியானது விரைந்து விரைந்து ஓடுமாகில் அதைச்சிலேற்பனநாடி என்று அறியலாம்.

49. ஆனதோர் வாத நாடி
அறிந்துற வலுவாய் நிற்கில்
ஊனமா முடலில் நோய்கள்
உலாவியே நிற்கு மாகில்
தானமாம் பித்த நாடி
தான்வலு வாகி நிற்கில்
காச்சலும் கடின மாமே 23

வாத நாடி உடம்பில் வலுவுற்று நிற்குமானால் நோய்களைத் தந்து உடலை ஊனமாக்கிவிடும். பித்தநாடி மிகுந்த வலுவுடன் நிற்குமாகில் கடினமான காய்ச்சலை அது ஏற்படுத்தும்.

50. வாதமும் அய்யந் தானும்
வலுவுற நிற்கு மாகில்
மோதிய வியாதி தீர
மூன்றுநாள் செல்லு மென்க
ஆதலால் பித்த நாடி
யணிலது போலே ஓடி
வேதனை யான காச்சல்
மீளுமென் றறிந்து கொள்ளே 24

வாத நாடியும், ஐயநாடியும் வலுவாக நிற்குமானால் அவ்வுடலில் வந்துற்ற பிணிகள் தீர மூன்று நாட்களாகும் என்று அறியவும். ~~மேலும்~~ பித்த நாடியானது அணில் போல் ஓடினால் வேதனையான காய்ச்சலை உண்டாக்கும் என்று அறிக.

51. பித்தமும் ஐயந் தானும்
பிரவெடமுத் தோடு மாகில்
சித்தத்தில் வெதும் நீரும்
சிறுகு ளிருந்திருமல் லுண்டாம்
பத்தியே சுரந்து வேர்த்து
பசிகெடும் மலஞ்ச லமும்
சற்றிவம் வழுவ முப்புச்
சரீரமும் வெளிறந் தானே 25

பித்த நாடியும் ஐய நாடியும் ஒன்றோடொன்று பிரண்டு ஓடுமாகில் வெப்புண்டாகும். பின் உடல் குளிர்ந்து இருமல் உண்டாகும். உடல் சுரந்து வியர்த்து விடும். மலம், சலம் எளிதில் போகாது. உடல் வழவழப்பும் பெற்று வெளிறிப் போகும்.

52. வாதமும் பித்த மய்யும்
வளிபுத்தெழுந் தோடு மாகில்
யேதுக்குள் பலத சீதம்
ரேஉஃ ரெக்கவ தாலும்
தீதுத்தி வனப்ப டுத்தும்
திரிதோ உஃத்தில் பலபிணியாம்
தாதுக்கள் கைகால் மெய்யுஞ்
சத்திகெட் டுலையுந் தானே 26

வாதபித்த ஐய நாடிகள் மூன்றும் சேர்ந்து எழுந்து ஓடுமாகில் உடம்பில் சீதத்தை ஏற்படுத்தும். முத்தோடத்தில் பல பிணிகள் உண்டாகும். கைகால் உளைச்சல் ஏற்பட்டு உடல் வலுவிழந்து காணப்படும்.

53. வாகிய அன்னங் கோழி
    மயிலென நடக்கும் வாதம்
யேகிய ஆமை அட்டை
    யிவையென நடக்கும் பித்தம்
போகிய தவளை பாம்பு
    போல்வது சிலேற்பம மென்க
ஆகிய நாடி மூன்றும்
    அமர்ந்திடில் சன்னி யாமே 27

வாத நாடியானது அன்னம், கோழி மயில் ஆகியன போன்று நடக்கும். ஆமை, அட்டை போன்று ஊர்ந்து நடப்பது பித்த நாடியாகும். தவளை, பாம்பு போன்று நடக்குமாகில் அது சிலேட்டும நாடி என உரைலாம். இம்மூன்று நாடியும் ஓடாமல் அமர்ந்தால் சன்னியாகும்.

54. அந்திக்த நாடி தானும்
    அரணைவால் துடியே போல
சந்தித்து மாத ரோடே
    தாவிபுக்கில் மீண்டா ரென்ன
வெந்தித்து விதறி யோடி
    வேதனை மிகவுண் டாகும்
வந்தித்து மதங்க ளாலே
    மதியுள்ளோ ரறிந்து கொள்ளே 28

மேற்கண்ட நாடிகள் அரணையிண், துண்டிக்கப்பட்ட வால் தனியே துடிப்பதுபோல் துடிக்குமாயின் அது சிரமங்களைக் கொடுக்கும், என்பதை மதியுள்ளோர் அறிவோராக. ஐம்பதின்மேல் ஆம்வயதாண்டு இறந்தவன் மீள்வதில்லை. அதுபோல இவ்வாறு துடிக்கும் நோயுடையவனும் மீள்வது கடினம் என்பதாம்.

55. பித்தமும் வாத நாடி

பேசிய அய்ய நாடி

உத்ததோர் சரியாய் தன்னில்

உலாவியே நிற்கு மாகில்

சுத்தமா முடலந் தன்னில்

சொல்லவே வியாதி யில்லை

முத்தணி முலைநல் மாதே

மொழிந்தனர் முனிவர் தாமே 29

பித்தநாடி, வாதநாடி, ஐயநாடி இவை சரியாய் ஓடிக்கொண்டிருக்குமானால் அந்த உடலில் சொல்லிக் கொள்வதற்குக் கூட ஒரு வியாதி இருக்காது என்று சித்தர்கள் கூறியுள்ளனர்.

56. கையைநீ பிடித்துப் பார்த்து

கடுகவே நிமித்துப் பின்னும்

உய்யவே வேறு மென்று

உகந்துநீ நாடி சொல்லும்

பய்யவே தொங்கித் தொங்கி

பத்தியே நிற்கு மாகில்

அய்யவே நாடி யென்று

அறிந்துநீ விட்டுப் போமே 30

கையைப் பிடித்துப் பார்த்து நாடியை அறிந்து கொள்வது நல்லது. இந்நாடிகள் விட்டு விட்டு தொங்கித் தொங்கி ஓடுமாகில் அது ஐய நாடி என்று அறிந்து கொள்ளலாம்.

57. நாடியிற் றெளிவி னாலும்
நற்குறி குணத்தி னாலும்
நீடியா விழியி னாலும்
நிலைபெறு தேகத் தாலும்
கூடிய வியாதி தன்னைத்
தொகுத்துநன் றறிய வேண்டில்
தேடிய குருடன் கையில்
சிக்கிய கோல தாமே 31

கண்களில்லாத குருடனுக்குக் கிடைத்த தடியைப் போன்று நாடியின் தெளிவு, நல்ல குறிகுணங்கள், களங்கமற்ற விழி, நிலை பெற்ற தேகம் இவற்றைத் தொகுத்து மருத்துவன் அறிந்து அதன் வழி நோயைக் கண்டறிந்து கொள்ளலாம்.

58. வாதபித்த_சிலேற்பன பிறவிநிலை
வாதமோ டய்யம் பித்தம்
மற்றுள வியாதி தானும்
நீதமா யறிந்து கொள்ள
நிகழ்த்தவே கேளாய் மானே
பாதமுஞ் சிரசு கைமேல்
பரந்திடு மூன்று தானும்
மீதினி லுள்ள வாறும்
விபரமாம் முனிவன் சொன்னான் 32

வாதமோடு ஐயம், பித்தம் மற்ற வியாதிகளை ~~அறிந்து~~ அறிந்து ~~கொள்வதற்குப்~~ பாதம், தலை, கையில் அறியப்படும் மூன்று நாடிகள் ~~இவற்றின் தன்மைகளைக் கொண்டு~~ மூலம் கண்டு கொள்ளலாம்.

59. உந்தியி லொதுங்கி நிற்கும்
        உறுப்பயி னெட்டு வாதம்
    நந்துநாற் குலையில் நிற்கும்
        நாற்பது பித்தந் தானும்
    பிந்துசே ரிடது மார்பில்
        அய்யமும் இருப தாகும்
    சித்தையிற் கரப்பான தானும்
        சேர்ந்திடு மொருபத் தொன்றே 33

உந்தியில் வாதத்தின் நாடிகள் என்பது அமர்ந்திருக்கும். நெஞ்சுப் பகுதியில் நாற்பது பித்த நாடிகள் இடம் பெற்றுள்ளன. இடது பக்க மார்பில் 20 ஐய நாடிகள் உள்ளன. கரப்பானி தொடர்பான நாடிகள் பதினொன்று அமர்ந்துள்ளன.

60. எண்பது வாதத் துக்கு
        மியலதா மஞ்சு வாதம்
    குண்டல வாதங் குடல் வாதம்
        குடல்கறி வர்ண வாதம்
    நன்பென நடுக்கு வாதம்
        நடுமதி யஞ்சு பேரும்
    தனிபென வறிந்து சொல்லுந்
        தலைவர்க ளாகு மாமே 34

வாதம் எண்பதாகும். அவற்றுள் இயல்பான வாதங்கள் ஐந்து, அவை குண்டலவாதம், குடல்வாதம், குடற்கறி, வர்ணவாதம், நடுக்குவாதம், நடுமதிவாதம் என்ற ஐந்துமாம்.

61. சுகமது சுருட்டு வாதம்
சுரோணிதக் கட்டு வாதம்
தகமெனும் கரளை வாதம்
தனிச்சீலை வாத தாகன்
அகமது முருட்டு வாதம்
அகம்புரி முடக்கு வாதம்
மகமுடனீ சொல்வ தெல்லாம்
மந்திரி தலைவ ராளே 35

சுருட்டு வாதம், சுரோணிதக்கட்டு வாதம், கரளை வாதம், தனிச்சீலை வாதம், உருட்டுவாதம், ~~அகம்புரி~~ முடக்கு வாதம் ஆகியனவும் சில வாதங்களாம்.

62. வாதமே காலில் சேரும்
~~வைத்தில்~~ வயிற்றில் பித்தம் சேரும்
சேதமே செய்யும் அய்யம்
சிரத்துக் கண்டத்து மேலே
நாதனா ரருளிச் செய்யே
நான்முகத் தரசு பாரில்
வேதநூல் விதியி தென்று
விரும்பியே விளம்பி னாரே 36

வாதம் காலில் சேரும். வயிற்றில் பித்தம் சேரும். ஐயம் தலை, கண்டங்களில் தங்கி துன்பத்தை உண்டாக்கும்.

63. எண்பது வாதந் தன்னை
யிருவகை பகுத்துக் காணில்
நண்பென அரைக்கு மேகால்
நாற்பது வாத மாகும்
பண்புசே ரரைக்குங் கீழே
பத்துநான் காகும் வாதம்
வன்புசேர் குழலி னாளே
வாதத்து யியல்பு தானே 37

வாதம் எண்பது வகைப்படும். இவற்றை இரண்டு வகையாகப் பகுத்துக் கொள்ளலாம். இடுப்புக்கு மேல் நாற்பது வாதங்களும், இடுப்புக்குக்கீழே நாற்பது வாதங்களும் அமைந்திருக்கின்றது.

64. வாதத்தின் குணம்:

வாதத்தின் குணமே தென்னில்
வயிறது பொருமிக் கொள்ளும்
தாதுக்க ளுளைந்து கைகால்
சந்துகள் கடுத்துக் காணும்
நீர்த்த சிறுநீர் தானும்
சிறுத்துடன் எரிந்து வீழும்
போற்ற வாத மென்று
புகன்றனர் புலவர் தாமே 38

வாதத்தால் வயிறு பொருமிக் கொள்ளும். தாதுக்கள் உளைந்து கைகால் சந்துகள் ~~இவை~~ கடுத்துக் காணும். சிறுநீரானது சிறுத்து எரிந்து வீழும்.

65. ~~இலைச்~~_மருந்து:

வேளைநீ ருழக்க தெண்ணும்

வேர்க்கொம்பு வெள்ளை யுள்ளி

யானநீர் களஞ்சொல் வொன்றாய்

யன்னீரில் அரைத்துச் சேர்த்து

ஏழையே யெள்ளி லெண்ணி

யிருகளஞ் சதனிற் சேர்த்து

தானமாந் திருநாளிக் கொள்ள

சமனாகும் வாதந் தானே 39

325 மி.லி

வேளை எனும் ~~நல்~~ நல் வேளைச் சாற்றைத் ~~தேவையான அளவு~~ எடுத்துக் ~~கொண்டு வேர்க்கொம்பு~~ சுக்கு, வெள்ளைப்பூண்டு இவற்றை முறையே 5கி~~ராம்~~ அளவு எடுத்து அதில் அரைத்து~~க் கொண்டு~~ நல்லெண்ணெய் 10கி~~ராம்~~ அளவு சேர்த்து உட்கொண்டால் வாதம் சமனமாகும்.

66. பித்தத்தின்_குணம்: ~~மருந்து~~

மயங்கிடு மெய்த ழ்ன்று

மஞ்சளித் திருக்குங் கண்கள்

தியங்கிடும் கிறுகி றுத்து

செருக்கு நெஞ் செரித்து இடித்துக்

கயந்திடும் நாவும் பல்லும்

கருகுமெய் கண்ம யங்கு

தயங்கிடும் பித்த ரோகம்

தன்குணம் தாக்கான் மாதே 40

பித்தம் மிகக் கொண்டவரின் உடல் தளர்ச்சியுறும். கண்கள் மஞ்சளித்துக் காணப்படும். தலை கிறுகிறுக்கும். நெஞ்சில் எரிச்சல் ஏற்படும். நாக்கும், பல்லும் கசப்புக் கொடுக்கும். உடம்பு கருத்துக் காணும். கண் மயங்கும்.

67. மருந்து:

சுத்தநேர் வாள மொன்று
    சுகமு ளதனி லுண்ண
பித்தநோய் குணமா மென்று
    பேசினார் முனிவர் தாமும்
முத்தக்கா சுழக்கு சுக்கு
    முந்திரி பழம்பால் காய்ச்சி
பத்துநாள் சீனி கூட்டிப்
    பருகவே பித்தம் போமே 41

சுத்தி செய்த நேர்வாளத்தை மருந்தாக்கி உண்டால் பித்த நோய்கள் குணமாகும் என்று முனிவர் கூறினர். 325கிராம் முத்தக்காசு, சுக்கு, முந்திரியும், பால் இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி, சீனி கூட்டி பத்து நாள் பருக பித்தம் நீங்கும்.

68. சிலேற்பனத்தின் குணம்

இனிப்புடன் வெளுக்கு நாவும்
    எடுக்கொணா நடக்கொ ணாது
பனித்தண்ணீர் சிறுநீர் பாயும்
    பஞ்சுபோல் வெளுக்கு மேனி
செனிப்புடன் குறைந்து வாட்டி
    செயல்பல மில்லா தாகும்
முனிந்துஇடுஞ் சிலேற்பு மத்தின்
    குணமென முனிவன் சொன்னான் 42

நாவில் இனிப்புச்சுவை தோன்றும். நா வெளுக்கும். வேகமாக நடக்க இயலாது. சிறுநீர் பனி நீர்போல் கழியும். மேனி பஞ்சுபோல் வெளுக்கும். செயல்படமுடியாதபடி உடல் வன்மையிழக்கும். இவையாவும் சிலேத்துமத்தின் குணங்களாகும்.

69. <u>மருந்து:</u>

சுக்குடன் கடுக்காய் தன்னை
சுடுசாம்ப விட்டெ டுத்து
தக்குடன் சமனே கொண்டு
தகத்திடித் தேவ டித்துச்
சிக்கென வைத்துக் கொண்டு
தேனதிற் குழைத்த ருந்த
துக்கஞ்சேர் சிலேற்று மந்தானி
துணிவுடன் தொலையுந் தானே 43

சுடுசாம்பலில் இட்டு எடுத்து, சுத்தி செய்து கொண்ட சுக்கு, கடுக்காய் இவற்றைச்சமஅளவு சேர்த்து இடித்து சலித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதனைத் தேனில் குழைத்து உண்டால் துன்பம் தீரும் சிலேற்றுமம் அகன்றுவிடும்.

70. வாதத்தின் குணம்:

ஆனதோ ராதி வாதம்
அரண்டுவந் துறுகாய்ச்சல்
தானமில் லாதி ருக்கும்
கனத்துடல் விரையல் சேரும்
கானமாங் கால்க ரங்கள்
கரித்துடன் கடுப்பாய் வந்தால்
வானதை முன்னே சொன்னேன்
வாதத்தின் குணமி தாமே 44

வாதத்தால் காய்ச்சல் வரும். ஓரிடமென்று இல்லாமல் எல்லாவிடங்களிலும் வாதம் பரவி விடும். உடல் கனத்து குளிரை ஏற்படுத்தும். கால், கைகள் கருத்து கடுப்பு ஏற்படுத்தும். இவை வாதத்தின் குணங்களாகும்.

71. மருந்து:

சீரக மிரண்டு குப்பைத்
திரிகடுகு சமனாய் நோக்கி
வேரின்தோல் சமனாய்க் கொண்டு
விளங்கவே பொடித்துத் தேனில்
வீரமாய் விடிவே ரந்தி
மின்னனாய்த் தின்று வந்த
பாரதங் குணங்க டன்னை
பகர்ந்துபோம் வாதந் தானே 45

நற்சீரகம், கருஞ்சீரகம் ஆகிய இரண்டு, சதகுப்பை, திரிகடுகு இவற்றைச் சமமாய் எடுத்துக் கொண்டு அதே அளவு கொடிவேலி வேரின் தோலையும் எடுத்துக் கொண்டு பொடித்து வைத்துக் கொள்ளவும். இப்பொடியைத் தேனில் குழப்பி காலை, மாலை உண்டுவர வாதம் நீங்கிவிடும்.

72. பித்த குணம் ~~மருந்து:~~

எண்ணிய பித்த மாகி
லிப்படி சிரசு நொந்து
கண்ணுடன் சிகப்புக் கூடி
கருணையு மய்யல் கூடும்
திண்மை தாகந் தோன்றுஞ்
சிறுசுர விஉஷமு முண்டாய்
உண்ணுநா வுலர்ந்து பிச்சு
உற்றதோர் நிறமு மாமே 46

பித்தம் அதிகமாகிவிட்டால் தலைவலி ஏற்பட்டு கண்ணும் சிகப்பேறி மயக்கம் ஏற்படும். அதிதாகம் ஏற்படும். சுரம் சிறிது ஏற்பட்டு நச்சுத் தன்மையும் ~~ஏற்பட்டு~~ தடி நாவானது உலர்ந்து நிறம் மாறும்.

73. இஞ்சியைக் குத்தி நன்றா

யிருகண்ணில் பிழிய வேணும்

மிஞ்சிய மிளகிந் துப்பு

ஏலமும் கடுக்காய் சுக்கு

வஞ்சிசேர் சீனி முந்திரி

வகையும் பொடித்து வெல்லம்

தஞ்சமாய்த் தின்னும் போதே

தகர்ந்திடும் பித்தந் தானே 47

இஞ்சியை நன்றாக இடித்தச் சாற்றை இரண்டு கண்களிலும் பிழிய வேண்டும். மிளகு, இந்துப்பு, ஏலம், கடுக்காய், சுக்கு, சீனி, முந்திரி இவற்றைப் பொடித்து வெல்லமும் சேர்த்து உண்ண பித்தம் பறந்தோடும்.

74. சிலேற்றும குணம் மருந்து:

தலைகனத் துடல்வெ தும்பி

தன்செவி மூக்க டைக்கு

மிலகிய முதர முற்றி

விரைந்துமெய் சுருக்கக் குத்து

விலகிய அசனம் வேண்டாம்

வெதும்பிய சிலேற்றுமத்தின்

நிலவிய சுரங்கள் கண்டு

நிச்செய மருந்து செய்யே 48

தலை கனத்து உடல் வெதும்பும். மூக்கு, செவி, இவை அடைத்துக்கொள்ளும். வயிறு உப்பி உடலில் குத்தல் ஏற்படும். உணவில் விருப்பம் இருக்காது. சுரம் உண்டாகும். இவை சிலேத்துமத்தின் குணங்களாகும்.

75. இசக்கு_மருந்து

திரிபலை யுடனே யேலம்

திரிகடு கதி விடையம்

அறிகடு ரோகணி ஓமம்

அக்கிரா கொத்து மல்லி

திரிபடா பத்திரி சீரகஞ்

சரியாகப் பொடித்து வெல்லம்

மறிபடு ரோகி தின்ன

வளம்படு முடலந் தானே 49

திரிபலை, ஏலம், திரிகடுகு, அதிவிடையம், கடுகுரோகணி ஓமம், அக்கிராகாரம், கொத்துமல்லி, தாளிசபத்திரி, சீரகம் இவற்றைப் பொடித்து வெல்லம் சேர்த்து சிலேற்பும நோயினர் உட்கொண்டால் நலமாகும்.

76. வாதக்_கதிப்பின் குணம்

வாதமே கதித்த போது

வாயுமே லெழும்பி மீளும்

வாதமே இரும லாகித்

துடர்ந்திடுஞ் சன்னி வாதம்

பேதமை செய்கிராணி

பெருவயி றுதிர தோஷம்

போதவே வரும் தென்று

பொருந்தவே முனிவன் சொன்னான் 50

வாதம் கதித்தால் வாயுவானது மேல் எழும்பி மீளும். வாதத்தால் இருமல் ஏற்பட்டு, அதனைத் தொடர்ந்து சன்னிவாதம், கிராணி, பெருவயிறு, உதிரதோஷம் இவை உண்டாகும்.

77. <u>மருந்து:</u>

நொச்சிச் சாறு அரைநாழி
    நோய்தா னென்ன அயவுருக்குப்
பச்சைதகரங் காயங் கோஷ்டம்
    பரவுஞ் சதகுப்பை யெருக்கம்வேர்
நற்சீரகம் மோதகம் நற்கடுகுள்ளி
    நவிலுஞ் சுக்கிவை காச்சிக் குடிக்க
கொச்சைப் படுத்தும் வாத மெல்லாம்
    குணமா மென்று கூறினாரே 51

நொச்சிச் சாற்றை ~~அரை 500~~ 650 மிலி எடுத்துக்கொண்டு இரும்பைக் காய்ச்சிக் சுருக்குக் கொடுத்து பருக வாதம் நீங்கும். மேலும் பச்சைதகரை, பெருங்காயம், கோஷ்டம், சதகுப்பை, எருக்கம்-வேர், நற்சீரகம், கடுக்காய், கடுகு, பூண்டு, சுக்கு இவற்றை இடித்து குடிநீராக்கிப் பருகினால் வாதக் கதிப்பு நீங்கும்.

பாலசிந்

78. <u>பித்தக் கதிப்புக் குளம்பு:</u>

பித்தமே கதித்த போது
    பெருத்திடுஞ் சத்தி குன்மம்
சித்தமே நெஞ்சி லெரித்து
    சிறிதுநாளி கழிச்சல் தோன்றும்
மெத்தவே வாய்வு கொண்டு
    மிகவுழன் றுழலை செய்து
கயத்திடும் மானே காணா
    கணங்குழ வரிய மாதே 52

பித்தம் உடலில் மிகுந்தபோது சத்தி எனும் வாந்தி, குன்மம், நெஞ்செரிவு, சிறிது கழிச்சல் இவை உண்டாகும். வாயு ஏற்பட்டு உடலுக்கு உளைச்சலை உண்டாக்கும்.

79. ~~இருக்குக்~~ குடிநீர்:

நெற்பொரியுஞ் சிறுபயிறும் வில்லை வேரும்
நெரியச்சீ ரேலமுடன் சுக்கு நெல்லி
முறிபடவே காய்ந் திரண்டொன் றாக்கி
முற்றியபின் னெடுத்து த வடித்து ற்றிக் கொள்ள
சொற்பெரிய சத்திகுன்ம சுரத்தின் சற்றி
துயரமுள்ள கிறுகிறுப்பு உழலை மூச்சுப்பி
பத்தருமைன் றிமையவரும் ரிஷிகள் தாமும்
பகர்ந்தனர் முன்னருந்தமி ழின்படியே தாமே 53

குடிநீர் நெற்பொரி, சிறுபயிறு, வில்வவேர், ஏலம், சுக்கு, நெல்லி இவற்றைக் காய வைத்து ஒன்றிரண்டாக இடித்துக் கொண்டு நீர் விட்டுக் காய்ச்சிக் குடிநீராக்கிக் கொள்ளவும். இதனைப் பருக சத்தி குன்மம், சுரம் அதையடுத்து வரும் தலை கிறுகிறுப்பு, உழலை போன்றவை நீங்குமென்று தம் முன்னோர் கூறினர்.

40. சிலேஷ்ம கதிப்புக் குழம்பு:

அய்யமே கதித்த போது
அசதியுற் றிருமல் காய்ச்சல்
நய்யுழல் மாந்தை ஈளை
நளிர் குளிர் விக்கல் சத்தி
செய்யுமா மூச்சடைப்பன்
தீதுறு காசங் கிராணி
தொய்யுமாம் வினைக ளெல்லாம்
தோன்றுமென் றரனார் சொன்னார் 54

ஐயம் கதித்தால் உடல் அசதியாகும். இருமல் காய்ச்சல் உழல் மாந்தை, ஈளை, நளிர், குளிர், விக்கல், வாந்தி, மூச்சடைப்பு, சுவாசகாசம், கிராணி இவை உண்டாகும் என்று கூறுவர்.

81. இதற்கு _~~மருந்து:~~

காட்டுக் கரணை கொடிவேலி

கிராம்பு திரிபலை திரிகடுகு

நாட்டு நெற்பொரி லவங்கம்யேலம்

நற்சீரக மமுக்கரா நாகப்பூ

கூட்டுஞ் சர்க்கரை நெய்தேனிற்

குணமாய்க் கூட்டிக் கொள்வீரால்

யோட்டித் தூரத்துஞ் சிலேற்பனமத்தை

உள்ள வியாதியும் ஒளிந்திடுமே 55

காட்டுக்கரணை, கொடிவேலி, கிராம்பு, திரிபலை, திரிகடுகு, நெற்பொரி, இலவங்கம், ஏலம், நற்சீரகம், அமுக்கரா, சிறு நாகப்பூ இவற்றை உலர்த்தி பொடிசெய்து, நெய் அல்லது தேனில் கொள்ள ஐயம் நீங்கும்.

82. வாத, பித்த தொந்திப்பின் _குணம் ~~தத்து:~~

கொள்ளுகை வாத ரெண்டுங்

கொடும்பித்தம் ஒருகாலோடி

கள்ளமாய் வயிறு விம்மி

கனக்கவே வாய்வு தோன்றுந்

தெள்ளிய கோதை யார்மேல்

சிந்தனை மிகவுஞ் செய்யுந்

துள்ளிய வாத பித்த

தொந்திப்பென் றுரைக்க லாமே 56

இருவகை வாதங்களும், பித்தங்களும் ஓரிடத்தில் ஓடிற்றானால், வயிறு விம்மிக் கனக்கும். வாயு உண்டாகிக் கோதையர் மேல் மிகுந்த மோகங்கொள்வர். இக்குறிகுணங்களைக் கண்டு இவற்றை வாதபித்த, தொந்திப்பு என்று அறியலாம்.

83. சந்தங் கோஷ்ட மதிமதுரஞ்

சமுத்திரா விடையஞ் சதகுப்பை

கெந்தங் காந்தமஞ்ச விலவங்கந்திரி

கடுகு சாதிக்காய் கிராம்பேலம்

வெந்தயம் பத்திரி கொத்தமல்லி

விளாவுட னிரண்டு சீரகமும்

அந்தப் பொடிதேன் வெருகடிகொள்

அகலும் வாத பித்தமுமே 57

சந்தனம், கோட்டம், அதிமதுரம், சமுத்திரவிடையம், சதகுப்பை, கெந்தகம், காந்தம், மஞ்சள், இலவங்கப் பத்திரி, கடுகு, சாதிக்காய், கிராம்பு, ஏலம், வெந்தயம், பத்திரி, கொத்துமல்லி, விழாலரிசி, நற்சீரகம், பெருஞ்சீரகம் இவற்றைப் பொடித்துத் தூளாக்கிக் கொள்ளவும். வெருகடியளவு பொடியைத் தேனில் கொள்ள வாதமும், பித்தமும் நீங்கும்.

வாதபித்த தொந்திப்பு

84. இசைந்திடும் பித்தம் ரண்டும்

ஈரரை வாத மோடில்

பசித்திடும் வயிறும் நெஞ்சு

பறந்தெறிந் தழன்று மெய்தான்

வசங்கெடுந் தலைகி றுக்கும்

மயங்கிடு முடல்வெ தம்பும்

முசித்திடும் பித்த வாத

முறைமையை அறிந்து கொள்ளே 58

இயல்பான இரண்டுவகை பித்தங்களும், வாதத்தோடு இணைந்து நடக்குமானால் வயிறுபசிக்கும். நெஞ்சு அழன்று மெய்நொந்து தலை கிறுகிறுக்கும். மயக்கம் ஏற்படும். உடல் வெதும்பும். இக்குறிகுணங்களைக் கொண்டு இவற்றை பித்த வாதம் என்று அறியலாம்.

மருந்து

85. சுக்குடன் கடுக்கா யேலஞ்
சுகமுடன் மிளகு நெல்லி
திக்குள மதுரஞ் சந்தஞ்
சீரகம் கொத்த மல்லி
தக்குடன் சமுத்திராக் காயஞ்
சமன்முந்திரி சீனி நெய்யில்
பக்குவப் பொடிதின் றாக்கால்
பயித்திய வாதம் போமே 59

சுக்கு, கடுக்காய், ஏலம், மிளகு, நெல்லி, அதிமதுரம், சந்தனம், சீரகம், கொத்தமல்லி, சமுத்திரா, காயம் இவற்றைப் பொடித்து முந்திரி சீனி ~~அல்லது~~ நெய் சமனாக கூட்டி உண்டு கலந்து வந்தால் பித்த வாதம் நீங்கி விடும்.

86. வாத சிலேற்பும குணம் ~~[illegible]~~
உயர்ந்திடும் வாதம் ரெண்டும்
ஒருசி லேற்பும தாகி
லயர்ந்திடும் கைகால் நொந்து
அடிவயி றதைத்துக் காட்டும்
தியங்கிடுந் தாது கெட்டு
வுதிரங்களும் குறைந்து வாடும்
மயங்கிடு வாதத் தோடு
மருவிய அய்யந் தானே 60

இருவகை வாதங்களும் சிலேற்பமத்துடன் ஒன்றாகினால் கைகால் நொந்து அயர்ச்சி ஏற்படும். அடிவயிறு அதைத்து தாது கெட்டு, உதிரங்களும் குறைந்து வாட்டும். ~~தன்மை~~ வாதத்தோடு ஐய நாடிகள் மருவும்போது இக்குணங்கள் தோன்றுமாம்.

மருந்து.31.

87. வசம்பு டஷ்திரி கடுகு

வடமோ தகமும் கொடுவேலி

திசம்பெரும் கடுக்காய் ரஷிடு

சீரகம் கொத்த மல்லி

கசம்படு கடுகு ஓமம்

காயமும் உள்ளி யிந்து

வசம்பட யிடித்துத் தின்ன

வாதமு மய்யம் போமே 61

வசம்பு, திரிகடுகு, ஓமம், கொடிவேலி, கடுக்காய், நற்சீரகம், பெருஞ்சீரகம், கொத்துமல்லி, கடுகு, காயம், பூண்டு, இந்தப்பு ~~வசம்பு~~ இவற்றை இடித்துத் தூளாக்கி உண்ண வாதமும் ஐயமும் நீங்கும்.

88. சேற்றுமு வாத தொந்திப்பு குணம் ~~மருந்து~~:

பாரித்த அய்யம் ரெண்டும்

பரிந்தொரு வாத மோடில்

கறித்துக் குளுந்து கசிக்

கும்பியில் குணக்கே டாகும்

நேரொத்த காயம் வற்றி

நெறிதலை திரேகம் நோகுஞ்

சீமுற்ற அய்ய வாதந்

தொந்திப்பாந் திறிநல் மாதே 62

இருவகைஐயமும்வாதத்தோடு இணைந்தால் உடல் குளிர்ந்து கசி குணக்கேடு உண்டாகும். உடல் வற்றும். தலையும் உடம்பும் நோகும். இவை த்ரி ஐய வாத குணங்களாகும்.

89. ஏலமோ டிலவங்கப் பச்சிலை நாகப்பூ

இருவேலி லாமிச்சம் சந்தனமாம்

வால்மிளகு கொத்தமல்லி கடுகுடன் திரிகடுகு

வசுவாசி திரிபலை ,யுமாம்

நீலமொடு சீரகங் கருஞ்சீரகங் கிராம்பு

நெல்பொரியுங் கோஷ்ட மதுவாம்

வாலுவளை தாரமதி மதுரமக் கிராவசம்பு

வரத்தை அதிவிடைய யமுக்கிராவாம்

சீலமாம் மஞ்சள் சதகுப்பை தேனில்கொள்ள 63

சிலேற்பும வாதம்போய் தெளிவாகும் உடலதுவாம்

ஏலம், இலவங்கம், திருநீற்றுப்பச்சை, நாகப்பூ, இருவேலி, விலாமிச்சம், சந்தனம், வால்மிளகு, கொத்துமல்லி, கடுகு, திரிகடுகு, சாதிபத்திரி, திரிபலை இவற்றைத் தேவையான அளவு எடுத்துக் கொள்ளவும். மேலும் நீலம், சீரகம், கருஞ்சீரகம், கிராம்பு, நெல்பொரி, கோஷ்டம், வாலுளுவை, தாரம், அதிமதுரம், அக்கிராகாரம், வசம்பு, அரத்தை, அதிவிடையம், அமுக்கிரா, மஞ்சள், சதகுப்பை, இவற்றைப் பொடித்துத் தூளாக்கித் தேனில் கொள்ள வாதம் நீங்கி உடல் தெளிவு பெறும்.

90. பித்த_சிலேற்பும தொந்திப்புக்குணம் ~~குருந்து~~:

மாதறாப் பித்தம் ரெண்டு

மருத்தொரு சிலேற்பமம் ஓடில்

சேதமாய்த் தலைவறண்டு

திமிர்ந்திடும் பிடரி நோகும்

போதவே வயறெ ரைக்கும்

புந்தியில் குணக்கே யாகும்

தீதுரு பித்த சிலேற்பமம்

தொந்திப்பான் திறிநல மாதே 64

இரண்டு வகை பித்தமும் சிலேற்பமமும் தொந்தித்தால் பின்வரும் குறி-குணங்களைக் காட்டும். தலை வறட்சி ஏற்படும். பிடரி நோகும். வயிறிரைச்சல் ஏற்படும். குணக்கேடுண்டாகும்.

91. சந்தனம் பச்சிலை கச்சோலம்

சாதிக்காய் பத்திரிப் பூவுடனே

வந்த திரிபலை திரிகடுகு

வசம்பு கோட்ட மிலவங்கம்

விந்துஓமம் சதகுப்பை

இருசீரகத் தோடு கொத்தமல்லி

அந்தத் தேனே சீனிஇஞ்சிக்

ககலும் பித்த சிலேற்பனமமே 65

சந்தனம், திருநீற்றுப்பச்சிலை, கச்சேலம், சாதிக்காய், சாதிபத்திரிப்பூ, திரிபலை, திரிகடுகு, வசம்பு, கோட்டம், இலவங்கம், இந்து, ஓமம், சதகுப்பை, இருசீரகம், கொத்தமல்லி, இவற்றைப் பொடித்துத் தூளாக்கி சீனி, தேன், இஞ்சிச்சாறு இவ்வனுபானம் ஏதேனும் ஒன்றில் கொள்ள பித்த சிலேற்பன தொந்திப்பு நீங்கும்.

92. சிலேற்பன பித்த தொந்திப்பின் குணம் ~~இருபத்~~

ஓங்கிடும் சிலேற்பனம் ரெண்டும்

ஒருபித்தம் ஒருகா லோடில்

ஏங்கிடும் இரும லீளை

இடர்செய்யும் வாய்வுஞ் சீறும்

மூங்கிடு மும்முதற் மெய்யும்

முறுதியுங் கெட்ட லைந்து

மாங்கிடும் அய்யத் தோடு

மருவிய பித்தந் தானே 66

இரண்டு வகை சிலேற்பனமும், பித்தமும் தொந்தித்தால் அது கீழ்க்காணும் குணங்களைக்காட்டும். இருமல், ஈளை, வாயு இவற்றைத் தந்து இடர் செய்யும்.

93. அக்கிரா மிளகு நெல்லி

அமுக்கிரா திப்பிலி அரத்தை

சுக்கொடு கடுக்காய் தானி

சொல்லதி விடைய மதிமதுரம்

தக்கதாய் ஏலஞ் சீரகம்

சமனிது பொடித்து நெய்யிற்

சிக்கென வருந்தும் போது

சிலேற்றும பித்தம் போமே 67

அமுக்கிரா, அக்கிரா, மிளகு, நெல்லி, திப்பிலி, அரத்தை, சுக்கு, கடுக்காய், தான்றிக்காய், அதிவிடையம், அதிமதுரம், ஏலம், சீரகம், இவற்றைச் சம அளவெடுத்து நெய்யில் கலந்து உண்ண சிலேற்றும பித்த தொந்திப்பு நீங்கும்.

94. வாதபித்த சிலேற்றுமமும் தொந்திப்புக் குணம் மருந்து :

இழுத்திடும் வாத பித்தம்

சிலேற்றும மிடறு மானால்

பழுத்திடு மேனி தானும்

பதங்கெடும் பசியு மில்லை

கழுத்துட லிடுப்பு கைகால்

சந்துகள் கடுத்துக் காணும்

முழுத்திடு மூல ரோகம்

மூவறு தொந்தித் தாலே 68

வாத பித்த சிலேற்றுமங்கள் தொந்திக்குமானால் உடல் பழுத்துக் காணும். வார்த்தைகள் குழறும். பசி இருக்காது. கழுத்து, உடல், இடுப்பு, கை, கால் ~~போன்றவற்றின்~~ சந்துகளில் வலி உண்டாகும். மூல நோய் உண்டாகும்.

95. மருந்து:

திரிபலை அக்கிரா ஓமம்

சிவதை மதுரம் அதிவிடையம்

திரிகடு கொத்த மல்லி

சீரகத் துடனே குப்பை

யறிவசம் பத்திரிகா யேலம்

யமுக்கிறா அரத்தை

யறிவுசேர் பத்திரி யோடு

யதுசமன் சேர்த்து தேனிற்

குறியுடன்

குணமதாம் தொந்த முனிரே 69

திரிபலை, அக்கிராகாரம், ஓமம், சிவதை, அதிமதுரம், அதிவிடையம், திரிகடுகு, கொத்துமல்லி, சீரகம், சதகுப்பை, வசம்பு, ~~திரிகடுகு~~, ஏலம், அமுக்கரா, அரத்தை, தாளிசபத்திரி, இவற்றை உலர்த்திப் பொடித்து சூரணமாக்கி தேனில் குழைத்து உண்டால் வாத, பித்த, சிலேற்பம தொந்திப்பு நீங்கும்.

96. ~~ஓடிய வாதத்தின் குணம்~~: ஓடிய வாதத்தின் குணம்

ஓடிய வாத மாகில்

உடலிதலை நெஞ்சு சந்து

தேடிய கால்க ரங்கள்

திறமதாய்ப் பிலக்கொட் டாது

வாடிய மேனி தானும்

வறண்டு நாவும் பல்லும்

ஓடிடும் உடல்கள் தோறு

முளையுடன் குத்து மெனிரே 70

ஓடிய வாதம், உடல், தலை, நெஞ்சு, சந்துகள், கை, கால்கள் ஆகியவற்றின் பலத்தைக் குறைத்து, மேனியை வாடச்செய்து நாவறட்சி, பல் வறட்சியையும் உண்டாக்கி உடல்முழுதும் ஓடி குத்தலை ஏற்படுத்தும்

97. தைலம்:

மலையிஞ்சி கூகை மஞ்சள்
வன்னொச்சி யாமணக்கு
சலங்கள்தான் னாழி னாழி
தெங்கின் எண்ணெய் னாழி
விலமதாம் கோட்டம் தாரம்
வெந்தயம் சன்னி னாயகம்
பிலமதாய்க் காய்ச்சிய் பூசி
உள்கொள்ளத் தீரும் வாதம் 71

கூகைமஞ்சள் (கோஷ்டம்)

மலையிஞ்சி, கூகைமஞ்சள், நொச்சி, ஆமணக்கு இவற்றின் சாறுகளை முறையே 1.3லி அளவு எடுத்துக் கொள்ளவும். தேங்காய் எண்ணெயும் ~~அதே அளவு~~ (1.3லி) எடுத்துக் கொள்ளவும். கோட்டம், அரிதாரம், வெந்தயம், சன்னிநாயகம் இவற்றையும் சேர்த்துக் காய்ச்சி தைலம் இறக்கிக் கொள்ளவும். இதனை மேலுக்கும் பூசி, உள்ளுக்கும் கொள்ள ஓடிய வாதம் தீரும்.

98. ஓடிவாத குணம் ~~தைலம்~~:

ஓடுந் துடிக்கு முடலெப்பம் பாக்கும்
நீடுமிகச் சித்துடலில் நின்றே யடங்கிடும்
தேடுந் துடிப்புடைய வாதமென்று தெரிவையீர்
நாடோறும் முடிக்குமென வோது 72

ஓடித்துடித்து உடலின் எல்லாவிடங்களையும் பார்த்து நீண்ட இவ்வுடலிலே நின்றே அடங்கிடும். இவ்வாதம் தினமும் துடித்த வண்ணமிருக்கும் என்று அறியலாம்.

99. ~~குடிவாத~~ தைலம்:

வாத மடக்கி நொச்சி
வளர்கொற்றான் மாவி லிங்கு
பீதமப்பா தோடையா மணக்கு
பாதுள்ள கள்ளிச் சாறு
வேதியா வேப்பெண் ணையும்
வெள்ளுள்ளி னாழி னாழி
ஓதவே கலக்கத் தாலும்
உரைத்திடக் கேளாய் மானே 73

வாதமடக்கி, நொச்சி, முடக்கொற்றான், மாவிலங்கு, ஆடாதோடை, ஆமணக்கு, கள்ளிச்சாறு இவற்றைச் சமஅளவு எடுத்துக் கொள்ளவும். வேப்பெண்ணெய், வெள்ளைப் பூண்டின் சாறு முறையே 1300மிலி ~~இவற்றையும்~~ சேர்த்து கலக்கிக் கொள்ளவும்.

100. சாதிக்காய் கிராம்பு சீரஞ்
சதகுப்பை கடுகு ஓமம்
நீதியாய்த் திரிகடுகு நெறித்
. . .திரிபலை யிந்துப்பு
வாசுற்ற உலைவாம் மஞ்சள்
மரமஞ்சள் வசம்பு ரோணி
மாறுற்ற பெருஞ்சீரகம்
வருகருஞ் சீரங் காயம் 74

சாதிக்காய், கிராம்பு, சீரகம், சதகுப்பை, கடுகு, ஓமம், திரிகடுகு, திரிபலை, இந்துப்பு, மஞ்சள், மரமஞ்சள், வசம்பு, கடுகுரோகிணி, பெருஞ்சீரகம், கருஞ்சீரகம், பெருங்காயம் இவற்றை வகைக்கு 10கி அளவு எடுத்துக் கொள்க.

101. கேளினைஞ் ச(ன்)னி நாயகங்

கிறிசக் கிறாவு ரத்தை

பாழது தீர்க்குந் தாரம்

பதியதி மதுரஞ் சந்தம்

வாளகில் பீதி நாறி

வகையிரு கழஞ்ச தாக

கோழியின் ரத்தங் கூட்டி

காய்ச்சியே கொள்ளே பூசே 75

சன்னி நாயகம், அக்கிராகாரம், அரத்தை, அரிதாரம், அதிமதுரம், சந்தனம், அகில், பீநாறி இவற்றையும் 10கி ~~அளவு~~ எடுத்துக் கொள்ளவும். அதனுடன் தேவையான அளவு கோழியின் இரத்தம் சேர்த்துக் காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். இறக்கிய இந்தத் தைலத்தை உடம்பில் பூசி வர குடிவாதம் குணமாகும்.

102. இரணவாத குணம் ~~செய்:~~

உதிரமுஞ் சுரந்து மங்கி

வாந்தியும் மூர்ச்சை யுண்டாம்

அதரமுங் கருகி மேலும்

அறவே கடுத்து நோகில்

திதமுற மரண வாதந்

திருமுனி யருளிச் செய்த

பதமுறு வேத நூலின்

படியிது பகரு வீரே 76

வயிறு சுரந்து, கண்மயங்கி, வாந்தியும், மூர்ச்சையும் உண்டாகி, உதடு கறுத்து, உடல் முழுதும் கடுப்புண்டாகும், குணங்களைக் கொண்டது, மரணவாதமாகும். இது திருமுனிவனாம் அகத்தியர் சொன்ன ஆயுர்வேத நூலின் படியிலானது என்று சொல்வர்.

..39

103. உளையு முடலந் தனிலெங்கும்

உளையா திருகி யுறுப்புளையும்

களையும் மிகுந்து வயறளத்தி

கனக் கச்சு வாந்தி வாய்நீறும்

விளையும் வெப்புத் தானுண்டம்

விடாதே மிகுந்து தலைகனத்தும்

வயைம் புருவ நுதலாளே

விரண வாத குணமிதுவே 77

உடல் முழுதும் உளைச்சல் உண்டாகும். தனிமை மாறி உடல் இறுகும். உறுப்புகளில் உளைச்சல் உண்டாகும். உடலில் களைப்பு தோன்றும். வயிற்றில் உளைச்சல் இருக்கும். மார்பில் குத்தல் எடுக்கும். வாந்தி உண்டாகும். வாய்நீர் ஊறும். வெப்புத் தோன்றும். விடாது தொடர்ந்து தலை கனக்கும். ஆகியன விரண வாத குணங்களாகும்.

104. வெண்கா யுள்ளி யதுபலமும்

மிகுந்த திரிகடுகு ஒருபலமும்

நண்பா யிந்துப்பு ஒருபலமும்

நலஞ்சேர் கொடுவேலி நாறீகழஞ்சு

மனிசேர் குமரிச் சார்சரியாய்

வகையா யதுவுந் தானெடுத்து

பனிசேர் நறுநெய் அதனிற்கூட்டி

பதத்து நாளெ மொழித்துநக்கே 78

வெங்காயம் ~~35கி~~, திரிகடுகு ~~35கி~~, இந்துப்பு வகைக்கு 35கி, கொடுவேலிச்சமூலம் 20கி~~ராம்~~, இவற்றுடன் அதே அளவு கற்றாழைச் சாறு சேர்த்து கலந்து கொள்ளவும். தேவையான அளவு நெய் சேர்த்து ஒரு நாள் எரித்து பதத்தில் இறக்கி நக்க விரணவாதம் குணமடையும்.

105. திமிர்வாத குணம் _

இரத்தமுங் காய்ந்து வாடி

எலும்புக்குத் தசையுங் கெட்டு

நரம்பது வலுவாய் விம்மி

நடப்பது குன்றி வாய்வு

உரமிகுஞ் சரீரந் தானும்

உறுதிகெட் டுளையும் வெப்பு

சீர்சரத் துடல்கன்மேல் தவழ

திமிர்வாத மென்றார் முன்னோர்

இரத்தம் சுண்டி, வாட்டமுறச் செய்து, எலும்பு, தசை, இவைகளும் கெட்டு நரம்பு விம்மிப் புடைத்து நடப்பது குன்றிவாயு. உரமுள்ள இவ்வுடம்பு உறுதிகெட்டு உளைச்சல் பெறும். வெப்புத் தோன்றும். இக்குணங்கள் உடலில் கண்டால் இதனைத் திமிர்வாதம் என்பர் முன்னோர்.

106. எண்ணெய் கஷாய மிதுதானும்

யிதமாய்ச் சொல்வோம் யினிக்கேளாய்

திண்ணம் நொச்சி முடக்கொத்தான்

தீரும்வேலிப் பருத்தி கொன்றை

இன்னே விழி பாவட்டை

இயன்ற ஆடாங் கொடியுடனே

வன்ன முதிரான் திரிபுரத்தான்

மருவுங் கள்ளி சதிரக்கள்ளி

நொச்சி, முடக்கொற்றான், வேலிப்பருத்தி, கொன்றை,

விழி - நீர்முள்ளி விழி, பாவட்டை, ஆடாங்கொடி, கள்ளி, சதுரக்கள்ளி

107. எருக்கு முருக்கு மாவிலங்கு

இயன்ற ஆடா தொடைதிராய்

நறுக்கும் வெள்ளூமத்தங் கழல்கொடி

நன்றாய் சிறுசெருப்படி யிரண்டு

பருக்கும் பலங்க ளாயெடுத்து

படிநீர் முப்பத்தி ரண்டதில்விட்

டெரிக்குமங் கசாயம் பெட்டொன்றாய்

யெடுக்கும் மருந்து யினிச்சொல்வோம் 81

எருக்கு, முருக்கை, மாவிலங்கு, ஆடாதோடை, திராய்,

வெள்ளூமத்தை, கழற்கொடி, ~~சிறுசெருப்படை, [illegible]~~, இவை

முறையே ஒவ்வொன்றிலும் 35கி~~ராம்~~ எடுத்து 416 லி ~~முப்பத்திரண்டுபடி~~ நீர் ஊற்றி

எட்டில் ஒன்றாகக் காய்ச்சி குடிநீராக்கிக் கொள்ளவும்.

சிறுசெருப்படை 70 கி சேர்த்து

108. சதகுப்பை யரத்தை மரமஞ்சள்

தகர குங்கிலியம் திரிகடுகு

இதுக்குக் கம்பிப் பிசினுடனே

இருசீ ரகம்வெப் பாலை

மோதும் முள்ளி சவுக்காரம்

முசுறு முட்டை கொத்தமல்லி

அதிவிடைய முடனிந் துப்பு

அரிதா ரத்துடன் சாதிலிங்கம் 82

சதகுப்பை, அரத்தை, மரமஞ்சள், குங்கிலியம், திரிகடுகு,

கம்பிப்பிசின், நற்சீரகம், பெருஞ்சீரகம், வெட்பாலை, உள்ளி,

சவுக்காரம், முசுறுமுட்டை, கொத்துமல்லி, அதிவிடயம், இந்துப்பு,

அரிதாரம், சாதிலிங்கம்.

109. கோட்டம் விழாலரிசி கலங்கொம்பு

குலவும் மஞ்சள் அதிமதுரம்

மீட்டும் வசம்பு பெருங்காய

மீதி லொன்று இருகழஞ்சு

கட்டி யொன்றித் தேகாச்சிக்

கொண்டே வடித்து மிகப்பூச

வாட்டு பெரிய திமிர்வாதம்

மற்றும் வாத மாறியதே 83

கோட்டம், விழா(ர்)லரிசி, மான்கொம்பு, மஞ்சள் அதிமதுரம், வசம்பு, பெருங்காயம், இவை வகைக்கு ~~5கிராம்~~ 10 கிராம் ~~அளவு~~ எடுத்து இடித்து எண்ணெய் சேர்த்து, தைலம் காய்ச்சிக் கொள்ளவும். அத்தைலத்தை உடலில் பூச திமிர்வாதம் முதலிய வாதங்கள் நீங்கும்.

110. ஏற்ப்பு வாதத்தின் குணம் ~~மருந்து~~

நாக்கு விழுந்து ஒரு . . . . .

நன்றாய் கைகால் வீழ்வதன்றி

வேர்க்குஞ் சரீரம் மஞ்சணிக்கும்

விடம்போல் மேனி தொடவொட்டா

ஆக்கை சரியும் நாளதுதான்

ஆகும் பத்து பதினஞ்சு

ஆக்க முடனே தப்பினக்கால்

உண்மை பிழைப்ப தென்றுணரே 84

நாக்கு சுவையறியும் தன்மை இழந்து கைகால் வீழ்ச்சி யடைந்து, உடல் வியர்க்கும். மஞ்சளிக்கும். உடம்பைத் தொட-முடியா வண்ணம் குத்தல் எடுக்கும். உடம்பின் பலம் குறையும். பத்து அல்லது 15 நாட்கள் தப்பினால் பின் பிழைத்து விடுவான் எனலாம்.

111. வெருகங் கிழங்கோர் பலமதனில்
மேவுந் தூணி நீர்விட்டு
உருக்கக் காச்சிக் குறுணியதாய்
உகந்த காடி அந்தமட்டும்
பெருக்கங் கட்டிக் கஷாயத்தைப்
பேணிக் கூட்டும் பித்தாகேளீ
உருக்கும் நல்லெண்ணை நாழிக்கு
உகந்த அரக்கு நாற்பலமே 85

35கிராம் மெருகங் கிழங்கை ~~8படி~~ 21.5லி நீர்விட்டு~~4படியாக~~ 5.3லி சுருங்கும் அளவு காய்ச்சிக் கொள்ளவும். அதே அளவு காடியையும் அதனுடன் சேர்த்துக் கொள்ளவும். நல்லெண்ணெய் 1.3லி~~ட்டர்~~, அரக்கு 140கி~~ராம்~~ இவற்றையும் எடுத்துக் கொதிக்க வைத்துக் கொள்ளவும்.

112. கூட்டிக் கஷாயம் கொதிக்க—வைத்து
கூறு மருந்து சதகுப்பை
நீட்டு மரத்தை இலவங்கம்
நீடு மேலத் திப்பிலியும்
மாட்டுங் கிராம்பு மதுரமுடன்
மஞ்சளுடன் கஸ்தூரி மஞ்சள்
கூட்டும் விளாலங் கோட்டமுடன்
கொண்ட சீரகம் பெருங்காயம் 86

சதகுப்பை, அரத்தை, இலவங்கம், ஏலம், திப்பிலி, கிராம்பு, அதிமதுரம், மஞ்சள் கஸ்தூரிமஞ்சள், விழாலரிசி, கோட்டம், சீரகம், பெருங்காயம்.

113. கற்பூரங் கடுகு ரோகணியுங்

கணக்குங் கோலொன் டிருகழஞ்சு

நற்பத மான வெண்ணெயது

நாளி கள்ளிப்பா லாழாக்கு

மெய்ப்பா யுள்ளி வசம்புடனே

மிகுந்த தொட்டிப் பாக்களவு

பதமான எண்ணெயது

கழஞ்சி கொள்ளப் பூசே 87

கற்பூரம், கடுகுரோகணி, இவற்றை முறையே 10~~கிராம்~~ ~~அளவு~~ எடுத்துக் கொள்ளவும். நல்லெண்ணெய் 1.3~~லிட்டர்~~, கள்ளிப்பால் ~~200கிராம்~~ 160கி, பூண்டு, வசம்பு, தொட்டிப்பாடாணம் இவை 5~~கிராம்~~ வகைக்கு சேர்த்துக் காய்ச்சித் தைலம் இறக்கிக் கொள்ளவும். இந்தத் தைலத்தை 5 ~~கிராம்~~ ~~அளவு~~ உள்ளே கொள்ளவும். மேலுக்கும் தடவவும். அரப்பு வாத குணம் தீரும்.

114. நரித்தலை வாதம் குணம் ~~மருந்து~~ -

தரித்திடும் வாதம் வாய்வு

சசவே நீர் கோவித் தொன்றாய்

யரித்திடும் தலைமேல் கைகால்

யகமோ டுளைந்து வெம்மி

முரித்திடு விறங்கி வந்து

முழங்காலில் வளைந்து கடும்

நரித்தலை வாத மென்றே

நவின்றனர் முனிவர் தாமே 88

தலையில் நீர் சேர்ந்து, தலை, உடம்பு, கைகால் இவற்றில் உளைச்சல் ஏற்பட்டு ~~வெம்பி~~ பருத்து, பின் இறங்கிவந்து முழங்காலில் வாதம் கூடும். இத்தகைய வாதத்தை நரித்தலை வாதமென்பர் முனிவர்.

115. விடத்தலை பிரண்டையிவை யிரண்டும்
மிகாமல் தேசிக் காயளவு
திடத்தோ டரைத்து பனைவெல்லம்
சேரக் கலந்து கலத்திலிட்டு
அடுத்த மருந்து கூடயிட்டு
அதனில் பிசைந்து நெருப்பில் வைத்து
மடுத்த நல்லெண்ணெய் தான்வார்த்து
மகிழ்ந்து சேர வருமருந்தே 89

விடத்தலை, பிரண்டை இவ்விரண்டையும் எலுமிச்சங்காயளவு நேக அரைத்து பனைவெல்லம் சேர்த்துக் கலந்து பிசைந்து கலத்திட்டு அடுப்பேற்றி நல்லெண்ணெய் வார்த்து இறக்கிக் கொள்ளவும்.

இதனை நரித்தலை வாத நோயாளிகள் 5 அளவு உண்டு வெந்நீர் பருக அவ்வாதம் குறையும். கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

116. கைகால் முடங்கின வாதம்:
மங்கையை வருடி மெத்த
வாத பித்தங்க ளய்யந்
தங்களிற் சிதறி வாதந்
தளர்ந்திடும் கால்கள் கைகள்
அங்கஞந் தாளுந்தாள் பித்த
அரைக்குமே லதுவுங் கோபந்
திங்கள்போல் முகத்தா யய்யம்
சிரசிலே சினப்ப தாமே 90

வாத, பித்த ஐயங்கள், தம்மளவில் மாற்றங்கொண்டு, கால், கைகள், தாள் இவை தளர்வுறும், நிலையை வாதமும், இடுப்புக்கு மேல் வலிக்கும் நிலையைப் பித்தமும், தலையில் துன்பத்தை ஐயமும் கொடுக்கும் என்பதாம்.

117. உடலது வெதும்பிக் கைகா

வுளைவுடன் கடுத்து நொந்து

கடலதாய்க் கால்க ரங்கள்

கனத்தபோ லயர்ந்து கானும்

சடமது யிருத்த தாகுஞ்

சலங்கெடத் தோஷ முண்டாம்

முடமதாங் கைதான் கால்தான்

முடங்கின வாதந் தானே 91

உடல் வெதும்பி கைகால் உளைச்சல் ஏற்பட்டு கடுத்து, நொந்து கானும் கால், கைகள் கனக்கும், அயர்ச்சி ஏற்படும். தோஷமுண்டாகும். இவை கைகால் முடங்கல் வாத குணங்களாகும்.

118. எண்ணெய் :-

நொச்சிச்சாறு தழுதாழை

நூகா தெருக்குப் பாலுடனே

இச்சை சேரும் பொடுதலையும்

இயன்ற குப்பை மேனியுடன்

வச்ச ஆயிலப் புங்குநிம்ப

மருவு இலுப்பை சிறுகுறிஞ்சா

அச்ச மில்லா வேலிப்பருத்தி

யாகும் மஞ்சள் தேங்காய்ப்பால் 92

நொச்சிச்சாறு, தழுதாழைச்சாறு, எருக்கம்பால், பொடுதலைச் சாறு, குப்பைமேனிச்சாறு, ஆயிலியம், புங்கன், வேம்பு, இலுப்பை, சிறுகுறிஞ்சான், வேலிப்பருத்தி இவற்றின் சாறும், மஞ்சளும், தேங்காய்ப்பால் இவற்றில் ஒவ்வொன்றிலும் 1.3லி எடுத்துக் கொள்ளவும்.

ஆயிலியம் (நாவல்)

119. ஓரொன் றொருபடி யாகக் கொண்டு
உகந்த கடுகெண்ணை யிருபடியும்
நேரே கலக்கி வசம்பூள்ளி
நீடு மாடா தோடைசீந்தில்
பாரே பேராமுட்டி நீலி
யருக்குமா பெருமரப்பட்டை யிளவேர்
சீரா யரைத்து கலக்கிவெந்து
சிறந்த பதத்தில் வடியே 93

~~இரண்டுபடி~~ (2.6லி) கடுகெண்ணெய் சேர்த்து கலக்கிக் கொள்ள வேண்டும். வசம்பு, உள்ளி(பூண்டு), ஆடாதொடை, சீந்தில் பேராமுட்டி, நீலி, பெருமரப்பட்டை, இளவேர் இவற்றை அரைத்து மேற்படி சாறு, எண்ணெய் சேர்த்து கலக்கிக் காய்ச்சி பதமாகத் தைலம் இறக்கிக் கொள்ள வேண்டும்.

120. பதத்தில் வடித்து நாளொன்று
பருகி ரண்டு காசிடைதான்
விதத்தில் காய மேல்பூச
மிகுத்தமருந்து தடவிடவே
உதித்த கைகால் முடங்கினது
உண்ணும் விஷங்கள் பலதீரும்
கதித்த வாத மிவையெல்லாங்
காணா தோடிப் போய்விடுமே 94

~~தினம்~~ 1 ~~5கிராம் அளவு~~ எண்ணெயை நாளொன்றுக்கு ஒருவேளை உள்ளே கொள்ளவும். அவ்வெண்ணெயையே உடம்பின்மேல் பூசிக்கொள்ள வாதத்தினால் உண்டான கைகால் முடக்கம் நீங்கி, கால், கை தன்நிலைபெறும். மேலும் இத்தைலம் உண்ட விடங்களைத் தீர்க்கும் தன்மை கொண்டது. தவிரவும் வாதத்தால் ஏற்படும் எல்லா நோய்களும் நீங்கிடும்.

121. சுருக்கு வாதம் குணம் :-

கைகால் விரல் சுருண்டுவிழும்

கதித்த நாவு குன்றிவிடும்

மெய்யே வடிவி னழகுகெடும்

வெதும்பு மேனி வெளுப்புண்டாம்

அய்யா விதனால் குணஞ்சொன்னோம்

அறிவ் ஈரபுத்தி யதுவல்லால்

செய்தே ரய்யச் சொற்குளறும்

சுருக்கு வாதக் குணந்தானே 95

கை, கால், விரல் இவை சுருண்டுவிழும். நாக்குக் குன்றும். உடம்பின் அழகு கெடும். உடல் வெதும்பி, வெளுப்படையும். இவற்றோடு பேசும்போது சொற்கள் குளறும். இவை சுருக்குவாத குணங்களாகும்.

122. எண்ணெய்

நத்தைப்பலாவின் பாலழக்கு

நல்ல நொச்சி சாறுழக்கு

மெத்தப் புளியிலை சாறுழக்கு

வெள்ளாட் டுடைய பாலுழக்கு

அத்தாமணக் கெண்ணையு முழக்கு

அஞ்சுங் காய்ந்து வடித்தெண்ணை

நித்தம் பூசி யுள்ளருந்த

நில்லா தெண்பது வாதமுமே 96

நத்தைப்பாலை (எருக்கு) நத்திதப் பலாவின் பால், நல்ல நொச்சிச்சாறு, புளியிலைச் சாறு, வெள்ளாட்டுப்பால், ஆமணக்கெண்ணெய் ஐந்தையும் முறையே 325 மிலி எடுத்துச் சேர்த்துக் காய்ச்சி எண்ணெய் வடித்துக் கொள்ளவும். இதனைத் தினமும் உடம்பில் பூசி உள்ளேயும் பருகிவர எண்பது வகை வாதமும் நீங்கும்.

வகைக்கு

123. கைகால் நெற்றித் தலைபிடரி

கனத்து நொந்துளை வுண்டாம்

மெய்யாய் ரூபந் தான்கெட்டு

வெதும்பி விதன மிகவுண்டாம்

தொய்யச் சுருட்டி ~~சிறுக்~~ முடக்கிவிடுஞ்

சுரோணித வாத குணமிதுவே

அய்யா முனிவர் தமிழதனா

லறியச் சொன்னா ரறிவாயே 97

கைகால், நெற்றி, தலை, பிடரி இவை கனத்து நொந்துக் காணும். உடலின் தன்மை கெட்டு வெதும்பி துன்பத்தை உண்டாக்கும். உடம்பையே ஒரு சுருட்டு சுருட்டிவிடும். இத்தன்மை சுரோணித வாத குணமாகும் — என்பதைத் தமிழ்ச் சித்தர்கள் சொல்லிச் சென்றுள்ளனராம்.

124. பாவு கழஞ்சி பதினாறும்

பதிவாய் மதிரம் பதின்களஞ்சு

ஏவுந் திரிபலை அறுகளஞ்சு

இசைந்த கச்சோலக் கிழங்குலவங்கம்

மேவுந் தோல்தேவ தாரமுடன்

மிகவே விடையந் திரிகடுகு

தூவி மருசி ரூருங்

சுகமாய்ப் பொடித்துத் தேனிலுண்ணே 98

பாவு 80~~கிராம்~~, அதிமதுரம் 50~~கிராம்~~, திரிபலை 30கி ~~கிராம்~~, கச்சோலக்கிழங்கு, வங்கம், தேவதாரம், அதிவிடையம், திரிகடுகு, ஏலரிசி இவை தேவையான அளவு எடுத்துப் பொடித்துத் தேனில் குழைத்து உண்ணவும்.

கச்சோலம் (சீமைக்கிச்சிலிக்கிழங்கு)

125. உண்டிவ் வாத மெண்பதும்
உருசி லேற்பன வாதசுரம்
திண்ணிப் பித்தங் காமாலை
சீதக் கடுப்பு சுடுவாதம்
எண்ணிய சுரோணித மொட்டிய
யுண்ணிவைமெப் பொருக்கா திருந்திடில்
வண்ணக் குழலாய் நான்சொன்ன
மருந்து பொய்யா தருகியதே 99

அவ்வாறு உண்பதால் வாதம் எண்பதும் சிலேற்பன வாதசுரம், பித்தம், காமாலை, சீதக்கடுப்பு, சுடுவாதம், சுரோணிதம் ஆகிய நோய்கள் நீங்கிவிடும்.

126. சூரிய வாத குணம் ~~மருந்து~~:
சூரிய வாதந் தோன்றித்
தும்மலும் சளியும் வெப்பம்
பாரிசா உடல்க னத்து
பரந்துடல் சிரசு நொந்து
மூரிகொட் டாவி விட்டு
முனிந்துமெய் தளர்ந்து சோர்ந்து
சீரித்து மயங்கி கண்ணுத்
தியங்கிடு மென்று சொல்லே 100

சூரிய வாதம் உண்டானால் தும்மலும், சளியும் உண்டாகும். உடல் வெப்பம் பெற்றுக் கனத்துக் காணப்படும். உடல், தலை இவை வலிக்கும். அடிக்கடி கொட்டாவி ஏற்பட்டு மெய் தளர்ந்து சோர்ந்து மயங்கி கண்தியக்கம் ஏற்படும்.

127. நிம்பப்பழமும் கழற்சி நொச்சி
நீரது நாழி நாழி
யம்பிசின் சுக்க ரத்தை
மதுர மிவைகள் கழஞ்சு
தம்பமா மெண்ணை நாழி
சற்றியே காய்ச்சித் தேய்ச்சல்
பம்பிய சூலை வாதம்
பறந்துபோ மென்றார் முன்னோர் 101

நிம்பப்பழம், கழற்சி, நொச்சி இவற்றின் சாறு ஒவ்வொன்றிலும் முறையே 1.3லி, சுக்கு, அரத்தை, வேப்பம்பிசின், அதிமதுரம் இவைகள் முறையே 5கி இவற்றுடன் 1.3லி நல்லெண்ணெயைச் சேர்த்துக் காய்ச்சி தைலம் இறக்கிக் கொள்ளவும். அதனை உடலில் தேய்த்து குளித்து வர சூரிய வாதம் நீங்கிடும்.

128. வறட்சி வாத பித்த குணம்:

தலையுங் கனத்து வலித்துமிகச்
சத்தே காது மந்தித்து
தலையு மங்க முளைந்துளைந்து
துலங்கக் குத்தி கிறுகிறுத்து
வலையுஞ் சரீரம் நோய்மிகுந்து
வறள யுலத்தி வாலைமிகும்
உலயும் வறட்சி வாதபித்தம்
உறுதி யிதுகண் டுறைப்பீரே 102

தலை கனக்கும், வலிக்கும். காது மந்தம் ஏற்பட்டு உடல் முழுதும் உளைச்சல் ஏற்படும். குத்தல் ஏற்பட்டு கிறுகிறுத்து உடம்பில் நோய் அதிகரித்துக்காணும் தன்மை வறட்சி வாத பித்தத்தின் குணங்களாகும்.

129. நன்னாரி யுடன்குருந் தொட்டி
நல்ல ரோகணி சந்தனமும்
மின்னார் சூடும் மிலாச்சமிவேர்
மிக்க திப்பிலி கோரைக்கிழங்கும்
அன்ன நடையாம் சரிசரியாய்
பாவி நெய்யில் வெந்துகொள்ள
மன்னார் வறட்சி வாதபித்தம்
பாரு முடலம் பருக்குமதே 103

நன்னாரி, குருந்தொட்டி, கடுகுரோகிணி, சந்தனம், விலாமிச்சம் வேர், திப்பிலி, கோரைக்கிழங்கு இவற்றைச் சம அளவு எடுத்துக் கொண்டு இடித்து நெய்யில் வேக வைத்து முறைப்படி உண்டால் வறட்சி வாத பித்தம் நீங்கி உடல் பருமனடையும்.

130. ~~இளக்கு எண்ணெய்:~~
கற்றாழை காிப்பான் பிரமியுடல்
கணக்கா யிடித்து நீரெடுத்து
மற்றாம் திரிபலை அரக்கிவையும்
வகையாய்ப் பொடித்துச் சாற்றிலிட்டு
பத்திரி கோட்டம் சந்தன மதுரம்
பச்சிலை கச்சோலந்தா மிலவங்கம்
கொத்தான் சாறு நல்லெண்ணையில்
வெந்து குளியின் மாதே 104

கற்றாழை, கரிசலாங்கண்ணி, பிரமியுடல் இவற்றை இடித்துச் சாறெடுத்து, திரிபலை அரக்கு இவற்றையும் பொடித்துச் சாற்றில் சேர்த்து, பத்திரி, கோட்டம், சந்தனம், அதிமதுரம், திருநீற்றுப்பச்சிலை, கச்சோலம், இலவங்கம், முடக்கொத்தான்சாறு இவற்றையும், மேற்கண்ட சாறுகளோடு சேர்த்து நல்லெண்ணெயும் சேர்த்துத் தைலம் வடித்துக் கொள்ளவும்.

131. வறட்சி பித்தவாத குணம்

அக்கினி உழலை சூலை
    யாவுலர்ந் திருக்குங் காய்ச்சல்
மிக்ககா திரைச்சல் மந்தம்
    மிகுந்திடும் குளிர்மூக்கி னீர்கள்
தக்கதோர் மயக்கத் தோடு
    தலைவலி சந்து நோவு
கைக்குநா வறச்சி பித்த
    வாதமாங் கண்டு கொள்ளே 105

அக்கினி, அழலை, சூலை இவை உலர்ந்திருக்கும். காய்ச்சல், காதிரைச்சல், மந்தம் இவை உண்டாகும். உடல் குளிர்ச்சியடைந்து மூக்கில் நீர்வடியும். மயக்கத்தோடு தலைவலியும், சந்து வலிகளும், நாவறட்சியும், பித்த வாத குறிகுணங்களாகும்.

மருந்து

132. காந்தங் கிட்டந் திரிகடுகு
    கய்யாந் தகரைச் சாற்றரைத்து
வாய்ந்தமாகத் தீர்பீர் பத்து
    னாளைக்குத் தின்ப் ராகிற்
சேர்ந்திடும் வாத பித்த
    வறச்சியன் செப்ப கைமாறி
சாந்தமாய்த் தீருமென்று
    தமிழ்முனி சாற்றி னாரே 106

காந்தம், அயக்கிட்டம், திரிகடுகு இவற்றைக் கையாந்தகரைச் சாற்றால் அரைத்து பத்து நாட்களுக்கு உண்ண வேண்டும். இவ்வாறு தொடர்ந்து உண்டுவர சேர்ந்துவிட்ட ~~பித்த~~ வாத பித்த குணமடையும்.

133. <u>என்ணெய்:</u>

பூலாவேர் வெற்றிலை கரிப்பா னாமணக்குப்
புளியிலை கொற்றா னொச்சி
பொன்னாங் காணி முருக்கிலையும்
ஏலங் கடுகு திரிபலையும் இருவேலி
லாமிச்சிருச் சந்தம் அரத்தை இருசீரகம்
கண்டில் வெண்ணை யோடு
நாலாங் கோட்டம் கிராம்பேலம் மதுர
மிலவங்கம் நன்னாரி கச்சோலம்
பச்சிலை சாதிக்காய்
எல்லா மொன்றித் தென்னை காச்சிக்
குளிக்க ஒழியும் வறட்சி பித்த
வாத தலைவலியுங் கண்ணோவும் 107

பூலாவேர், வெற்றிலை, ~~கரிப்பான்~~, கரிசாலை, ஆமணக்கு, புளியிலை, முடக்கொற்றான், நொச்சி, பொன்னாங் காணி, முருங்கையிலை, ஏலம், கடுகு, திரிபலை, இருவேலி, விலாமிச்சம், சந்தனம், அரத்தை, ~~இருசீரகம்~~ நற்சீரகம், பெருஞ் சீரகம், கோட்டம், கிராம்பு, ஏலம், அதிமதுரம், இலவங்கம், நன்னாரி, கச்சோலம், திருநீற்றுப்பச்சை, சாதிக்காய் இவற்றைச் சேர்த்து நல்லெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி தைலம் வடித்துக் கொள்ளவும். இந்த எண்ணெய் தேய்த்துக் குளிக்க வறட்சி பித்தம் நீங்கும். வாத தலைவலியும், கண் நோயும் நீங்கும்.

கிருவேலி (வெள்வேல் கருவேல்)

134. சன்னி வாதத்தின் குணம் ~~தயிலம்~~:

கையுங் காலுமொரு பக்கம்

கனத்துத் திமிர்ந்து கண்ணுங்கும்

மெய்யு மறவே மெலிந்தவரும்

வெகுண்டே நாவுந் தடுமாறும்

செய்யுங் குணத்தை நாடியக்கால்

செப்புஞ் சன்னி வாதமென்று

உய்யு மடிக்கு வகைகாணோ

உலகோ ரறிய உரைத்தோமே 108

கைகால்கள் கனத்துத் திமிர்ந்து காணும். கண்ணில் அயர்ச்சி காணும். உடல் மெலியும். கோபம் ஏற்பட்டு நாத்தடுமாறும். இக்குறிகுணங்களைக் கண்டால் அது சன்னிவாதம் என்று அறிந்து கொள்ளலாம்.

தைலம்

135. முருங்கைவேர் பிரண்டைத் தண்டு முத்தண்டு X

முதிர்ந்த எருமை மூத்திரத்தில்

விரதா யிடித்துத் தான்பிழிந்து

வெம்பி னெண்ணை தனிற்சேர்த்து

அரிதாரமுடன் சாதி லிங்கம்

எருக்கம் பாலிட்டு காய்ச்சிவடித்

திருவே சற்றே உட்கொள்ள

தீருஞ் சன்னி வாதமதே 109 ?

முருங்கைவேர், பிரண்டைத்தண்டு ~~முத்த~~, முதிர்ந்த எருமையின் மூத்திரத்தில் கலந்து இடித்துப் பிழிந்து கொள்ளவும். வேப்பெண்ணெய், ~~சேர்த்து~~, அரிதாரம், சாதிலிங்கம், எருக்கம்பால் இவற்றையும் சேர்த்துக் காய்ச்சி எண்ணெய் இறக்கிக் கொள்ளவும். தினம் சிறிதளவு எண்ணெய் உட்கொண்டால் சன்னிவாதம் தீரும்.

136. மரணவாத_சன்னியின்_குணம்_தயிலம்:

கண்ணும் வாயுஞ் சோபிக்கும்
    கையுங் காலும் அயர்வாகும்
நண்ணும் நாவுஞ் சொற்றளர்ந்து
    நடுக்கி இருக்கும் நாவுலரும்
என்னுஞ் செவியுஞ் சில்லென்னு
    இருகால் தன்னை னோவிக்கும்
வன்ன மிதுவே கண்டாக்கால்
    மரண வாதஞ் சன்னியிதே 110

கண்,வாய் இவை சோபிக்கும். கை,கால் அயர்ச்சி காணும். நாதளர்ந்து உலர்ந்து சொற்கள் குளறும். செவியில் சில்லிட்ட உணர்ச்சி தோன்றும். கால்கள் வலி எடுக்கும். இவை மரணவாத சன்னியின் குணமாகும்.

தைலம்

137. வேலிப் பருத்தி கழல்கொடியும்
    வெருகுஞ் செருப்படி எருக்கிலையும்
ஆலின் பருப்பு மாவிலிங்கு
    ஆடா தோடை திருகுகள்ளி
நீலி வேளை சமனிடித்து
    நீரை வாங்கி அதிற்கள்ளிப்
பாலி னுடனே வேப்பெண்ணெய்
    பகர்ந்து காய்ச்ச மருந்தைக்கேள் 111

வேலிப்பருத்தி, கழற்கொடி,செருப்படி, எருக்கிலை, ஆலம் பருப்பு,மாவிலிங்கு, ஆடாதோடை,திருகுகள்ளி, நீலி,வேளை இவற்றைச் சம்மாக எடுத்து இடித்துச் சாறு எடுத்து அதனுடன், கள்ளிப்பால்,வேப்பெண்ணெய் சேர்த்துக் காய்ச்சிக் கொள்ள வேண்டும்.

138. சுக்கு வசம்பு வெள்ளுள்ளி

சோமன மோதகம் ரோகணியும்

தக்க கோட்டம் அதிமதுரம்

தாரம் விடையம் சனிநாயகம்

மிக்க வரத்தை வலம்புரிக்காய்

வியன்பூ நாகம்வெந்தபூசி யுள்க்கொள்ள

நீக்கு மரண வாதசன்னி

நிகழ்ந்தே யோடிப் போய்விடுமே 112

சுக்கு, வசம்பு, வெள்ளுள்ளி, கற்பூரம், ஓமம், கடுகு-ரோகணி, கோட்டம், அதிமதுரம், அரிதாரம், அதிவிடையம், சன்னி-நாயகம், அரத்தை வலம்புரிக்காய், பூநாகம் இவற்றை மேற்சொன்ன எண்ணெய்க் கலந்திட்டு வேகவைத்து மேற்பூசி, உட்கொள்ள மரணவாத சன்னி குணமாகும்.

139. குதிரை வலியின் குணம் ~~அஞ்சனம் எண்ணெய்:~~

எண்ணிய சன்னி வாத

துள்ளிதுங் குதிரைவலியெண்ணில்

கண்ணிற் புருவங் கருப்பதாங்

கையுங் காலு மொருபக்கம்

மெண்ணுரையும் மிகுந்து தள்ளு

மிதுவே திருக வலியுண்டாம்

விண்ணைப் பார்த்து விழிநிக்கில்

மீளா திதுவுந் திண்ணமிதே 113

குதிரைவலி எனும் சன்னி வாதத்தின் குறிகுணங்கள் பின்வருமாறு. கண் புருவம் கருப்பாகும். வாயில் நுரைதள்ளி கைகால்கள் ஒரு பக்கமாக இழுத்துக் கொண்டு திருகிக் காணும். விண்ணை நோக்கி விழிகள் பார்க்கும். இந்நோய் கண்டால் மீள்வது கடினமாம்.

..58

அஞ்சனம்:-

140. சுக்கு மிளகு திப்பிலியும்

சோம அப்பு வெள்ளுள்ளி

தக்கம் கொந்தாளம் பருப்புத்.

தறுகா வசம்பு இவைகூட்டி

ஒக்கத் தேசிப் பழச்சாற்றி

லொன்றா யரைத்தல் சனவுண்டை

மிக்க குதிரை வலியதுதான்

மீளத் தேசிப் பழத்திலிடே 114

பச்சைக்கற்பூரம்

~~அஞ்சனம்~~. சுக்கு, மிளகு, திப்பிலி, ~~இந்துப்பு~~, வெள்ளுள்ளி, கொந்தளம் பருப்பு, வசம்பு இவை சம அளவு எடுத்து எலுமிச்சம்-பழச்சாற்றில் அரைத்து சிறு சிறு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும். எலுமிச்சம் பழச் சாற்றில் இவ்வுருண்டையை உரைத்துக் கண்ணிலிட குதிரைவலியினின்று மீளலாம்.

141. **எண்ணெய்:**

கொள்ளுங் குதிரை வாலரிசி

கூரிய நொச்சி ஆடாதோடை

முள்ளே யுள்ள குறுவட்டு

முக்குங் கைமூலி தூதுவளை

வெள்வேல் மிக்கச் சாரணைவேர்

மீறுதே சற்றுக் கொடுவேலி

உள்ளே எரித்த வேப்பெண்ணை

உதவக் குதிரை வலிநோயே 115

கொள், குதிரைவாலரிசி, நொச்சி, ஆடாதோடை, தூதுவளை, வெள்வேல், சாரணைவேர், கொடுவேலி இவற்றைத் தேவையான அளவு வேப்பெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வடித்துப் பருக குதிரை வலி நோய் நீங்கும்.

142. புறவீச்சுக் குணம்: உள் வீச்சுக் குணம்:

அடுத்தடுத் தெடுத்துக் குற்றி
அதிகமாம் விரைத்து வேர்த்துப்
படுத்தனா டிக்கும் பேசில்
பல்லது கிட்டி நெஞ்சு
அடுக்கவே கட்டிச் சீறி
அங்கமும் பிறகே வீழில்
திடுக்கெனப் பிறவீச் சென்று
செப்பலாஞ் செப்ப லாமே 116

உடலில் ஆங்காங்கே அடுத்தடுத்து குத்தல் எடுத்து, உடல் விரைத்து அதிகம் வேர்த்து, நாக்குளறி, பல்கிட்டி, நெஞ்சடைத்து உடம்பையும், கழுத்தையும் பின்னுக்கு வளைத்து துன்பந் தரும். இந் நோய் புறவீச்சு நோய் என்று அறியலாம்.

143. குத்துமே அடுத்த டுத்துக்
குன்றி ஏங்கியே நிமிர்ந்து
மெத்த விரைத்துள் ளடங்கி
வேர்த்தும் விகற்ப மிகவுண்டாம்
பற்றி இன்றி எதிர்தள்ளும்
பசப்புடன் பல்லும் பூட்டு
மற்றிய உள்வீச் சென்ற
வென்பலாம் எண்ண லாமே 117

அடுத்தடுத்து குத்தலை உண்டாக்கி குன்றச் செய்து, பின் நிமிர்ந்து, விரைத்து வேர்த்து, வாய்வார்த்தைகளில் விகற்பம் உண்டாகும். உண்ட உணவை எதிர்த்துத் தள்ளி பல்லுங்கிட்டி உடம்பின் உள் பகுதிகளில் வலி ஏற்படுத்தும் தன்மை உடையது உள் வீச்சாகும்.

144. கசகூலையின் குணம் :-

மாலையி லுதரந் தன்னில்

மதிப்புடன் திடனெழுந்து

ஆலையில் நாவி தன்னி

லப்படிக் கிடந்து நொந்து

நூலை . . .தகு தன்னில்

நருந்தே பத்தி னோவுண்டால்

காலைப் பற்றியே யிழுக்கும்

கசகூரை வலியென் றறிவீரே 118

மாலை நேரத்தில் வயிறு எழுந்து, நொந்து வலி எடுக்கும். கொப்பூழும் வலித்து நொந்திருக்குமானால் அது கசகூலையாகும்.

145. உள்வீச்சு, புறவீச்சுக்கு எண்ணெய் :-

தடித்த மஞ்சள் கடுகுள்ளி

தேங்கா யிந்துப்பு வேப்பெண்ணை யிற்காச்சி

முடித்த கூந்தல் கிளிமொழியே

முழுது மிரண்டு கிளிக்கட்டி

கடித்த பல்லு தலைபிடரி

கால்கை சந்து சடங்குத்துப்

பிடிக்க சூரைவலி வாதசன்னி

புறவீச்சு உள்வீச்சு போய்விடுமே 119

மஞ்சள், கடுகு, உள்ளி, தேங்காய், இந்துப்பு, இவற்றை வேப்பெண்ணெயில் கிளிகட்டி காய்ச்சி இறக்கிக் கொள்ளவும். கிட்டிபல், தலை, பிடரி, கால், கை, சந்துகள் இவ்விடங்களில் இந்த எண்ணெயைத் தடவி பிடித்துவிட புறவீச்சு, உள்வீச்சு இவை நீங்கும்.

146. ஒற்றடம்

மாட்டோடு தன்னை நன்றாய்
வடியவே பொடித்துப் பின்னை
ஓடது தனலி விட்டு
உழைப்புடன் வறுத்துக் கொண்டு
சூடுடன் கிழிகள் கட்டி
சுளுந்தளக் குற்று வீராய்
ஓடுமே வலிக ளஞ்சு
மோடுமென் றுரைத்தார் முன்னோர் 120

மாட்டின் மண்டையோட்டை நன்றாகப் பொடிசெய்து, ஓட்டினைத் தணலிலிட்டு நன்றாக வறுத்து கிழிகட்டி சுடச்சுட ஒற்றடம் தர உள்வீச்சு, புறவீச்சால் ஏற்படும் ஐவகை வலிகள் உடலிலிருந்து களைந்து ஓடும் என்று முன்னோர் உரைத்தனர்.

147. பிள்ளை பெற்றவள் சுவாச காசத்தின் குணம் ~~மருந்து~~:

பிள்ளை பெற்ற தாயாருக்குப்
பெருத்த சுரமாந் தலைவலியும்
முன்னு முளலை தவனமுண்டாம்
உதர இரைப்புடன் கழிச்சலுமா
மெள்ளத் தொடுத்த களைமூச்சும்
விழியில் தெளிவுங் கெட்டிருக்குந்
துள்ளித் துடித்த சுவாசகாசந்
துளச்சி உயிரை வனத்திடுமே 121

பிள்ளை பெற்ற தாய்க்குச் சுரம், தலைவலி, உழலை வறட்சியால் ஏற்படும் வெப்பம், வயிற்றிரைச்சல், கழிச்சல், ~~இளைப்பு~~ மூச்சிரைப்பு, விழிபஞ்சடைதல், சுவாசகாசம் இவை உண்டாகும் என்பர்.

சூரணம்

148. அசமோ தகமு மாறிரண்டு

ஆன சீரக மதிற்பாதி

நயமாஞ் சுக்கு முக்கழஞ்சு

நல்ல கிராம்பு மதிற்பாதி

செயமாம் பத்திரி அதிற்பாதி

சேர்த்துப் பொடித்துத் தேனிலுண்ண

பயமா காச சுவாசநிற்கும்

பாரில் முனிவர் பகர்ந்ததுரே 122

அசமோதகம் 60கிராம், சீரகம் 30கிராம், சுக்கு

15கிராம், கிராம்பு 7½ கிராம் பத்திரி 3.5கிராம் இவற்றைச்

சேர்த்துப் பொடித்துத் தேனிலுண்டால் ~~தம்மை~~ வருத்தப்படுத்தும்

காசசுவாச நோய் நீங்கும்.

தைலம்

149. நத்தைச் சூரி குதிரைவாலி

நாகப் பாம்பு நாயுருவி

பத்துக் கோழி முட்டைதனிற்

பரிந்து தயிலந் தானெடுத்து

மத்த சன்னி மோகித்து

வாக்கு மறந்து கிடந்தவர்கள்

சத்தப் படாம லெழுந்திரிப்பார்

தப்பா தென்றுஞ் சத்தியமே 123

நத்தைச் சூரி, குதிரை வாலி, நாகப்பாம்பு (பூநாகம்)

நாயுருவி இவற்றைத் தூளாக்கி பத்துக் கோழிமுட்டை உடைத்து

ஊற்றிக்கொள்ளவும். தனியே தைலமிறக்கிக் கொள்ளவும். ~~இவற்றை~~

~~கலந்து~~ இதனைக் கொடுத்தால் சன்னி ஏற்பட்டு பேச்சற்றுக் கிடந்தவர்கள்

தெளிவு பெற்று எழுந்திருப்பர் என்பர்.

150. சன்னியின் குணம்:-

கருத்துறு சன்னி தன்னைக்
 கசடற அறிய வேண்டி
உருத்திராக் கிசத்தை நன்றா
 புரைத்து நாவதனி லூட்டத்
திருத்தமாய்க் கருத்துக் கண்டால்
 திதமுறு சன்னி யாகும்
பெருத்தது வெளுத்துக் கண்டால்
 பிணியது தல்ல வாமே 124

சன்னியின் தன்மையை அறிய ஒரு வழி கூறப்பட்டுள்ளது. உருத்திராட்சத்தை நன்றாக உரைத்து நாவினில் ஊட்டும்போது நாக்கு கறுத்திருக்குமானால் அது சன்னி என்று அறியலாம். வெளுத்துக் கண்டால் அது இல்லை என்று அறியலாம்.

151. குணங்குறி மிகுந்து தோன்றில்
 குற்றமே குறைந்து நின்றால்
இணங்கு மந்திர மருந்தால்
 இவைகளால் மீள்வ தின்ன
குணங்களாக் குற்ற மேறிக்
 குறிகுணங் குறைந்து நின்றால்
பிணங்கிடா தகன்று சீலான்
 பிரித்ததாய்ப் பேச லாமே 125

குறிகுணங்கள் மிகுதியாகத் தோன்றி, குற்றம் குறைந்து கண்டால், இணங்கும் மந்திரமாகும். இவற்றினின்று மீள்வதற்கு குற்ற-மேறி, குறிகுணம் குறைந்து காணப்படின் சன்னி தீருமென்று கூறலாம்.

152. சன்னி,வலியுஞ்சுக்கும்_புகை

குழியானை மயிலிறகு

குணமான வலம்பு ரிக்காய்

சுவான பூனைக் காட்டஞ்

சாதிலிங்கம் சிலந்தி மஞ்சள்

வலுவதிரீ வசம்பு உள்ளி

சுக்கு எருமைக் கொம்புபொடி

பழுதற இடித்துக் கம்பளியில்

பரப்பி திரிபுகை யேற்க

முழுதும் வலிசன் னிக்கு

முறிந்தோ டுமென் றனரே 126

குழியானை, மயிலிறகு, வலம்புரிக்காய், பூனைக்காட்டம், சாதிலிங்கம், சிலந்தி நாயகம், மஞ்சள், வசம்பு, உள்ளி, சுக்கு, எருமைக் கொம்பின் பொடி இவற்றை இடித்துக்கம்பளியில் பரப்பி திரியாகத் திரித்து அதனைப் புகைத்து உள்ளே இழுக்க சன்னியும் ஐவகை வலிப்பும் நீங்கும்.

153. சமுத்திரப் பழமி லுப்பை

தரும்புன்னாக் கதுவுஞ் சுக்கு

அமுக்கியே பொடித்து நன்றாய்

அதுகுழல் வைத்தே ஊத

திமுக்கென் றெழுந்த சன்னி

தீருமே வலிக ளஞ்சு

நமுக்கென வந்த பேயுஞ்

சாடி யோடிப் போமே 127

சமுத்திரப்பழம், இலுப்பைப் புன்னாக்கு, சுக்கு இவற்றைப் பொடித்து அப்பொடியை குழலில் வைத்து மூக்கினுள் ஊத சன்னியும் ஐவகை வலிப்பு நோய்களும் தீரும்.

154. முகவாத சன்னியின் குணம் ~~தைலம்~~:

கண்ணித் தலையில் புருவத்தில்
காதில் செகிட்டில் குத்துண்டாய்
பண்ணிப் பறிக்கும் முகமதனைப்
பக்கம் பற்றி யேதிருகி
லெண்ணிச் சொல்லும் முகவாத
மிடமுஞ் சன்னி யீதென்று
நண்ணிச் சொன்னோஞ் சிரோவாதம்
நாடுங் குணமு மிதுவாமே 128

தலையில், புருவத்தில், காதில், செகிட்டில் குத்தல் ஏற்பட்டு முகத்தில் பாதிப்புண்டாகும். முகம் ஒரு பக்கமாகத் திருகிக் கொள்ளும். இதனை முகவாத சன்னி எனலாம்.

தைலம்

155. நத்தைச் சூரி நரி மிரட்டி
நலமாந் துத்தி வேப்பந்தோல்
தோத்து முசறு துடையகறு
துலங்கு நிலவேர் பகுத்தியுட
தனத்து நல்ல பாம்புக் கண்டந்
தாக்குங் கோழிக் குடலுடனே
வித்து முதிய வேப்பெண்ணெய்
வேறே யுரைக்க மருந்தைக்கேள் 129

நத்தைச்சூரி, நரிமிரட்டி, துத்தி, வேப்பந்தோல், முசுறு முட்டை, நிலவேர், நல்லபாம்புக்கண்டம், கோழிக் குடல், இவற்றை முறையே 10~~கிராம் அளவு எடுத்து~~ வேப்பெண்ணெயும் தேவையான அளவு எடுத்துக் கொள்ளவும்.

156. கேளீ ரின்னம் வசம்புள்ளி
கிளருங் காயம் வாலுளுவை
கோழியி ரத்த மிரைப்பொட்டியும்
கொளுஞ் சன்னி நாயகமுங்
காளிய கம்பிப் பிசினுடனே
கறுத்த சீரக மதுகட்டித்
தெளிவா யோரொன் றிருகளஞ்சு
திறமாய்க் காச்சி வடிகொள்ளே 130

மேலும் வசம்பு, ~~உள்ளி~~ பூண்டு, பெருங்காயம், வாலுளுவை, கோழியின் இரத்தம், இரைப்பொட்டி எனும் இரைப்பை சன்னி நாயகம், கம்பிப் பிசின், கருஞ்சீரகம் இவை முறையே 10கிராம் அளவு எடுத்துக் கொள்ளவும். இவற்றை முன் சொன்ன வேப்பெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சித் தைலம் இறக்கிக் கொள்ளவும்.

157. தொட்டுப் பூச உள்நக்கத்
துலங்கு தழலிற் றூபமிட
இட்டிட அடையுங் காதுதனிற்
விசையுங் குமிலத் துளிவிட
மட்டும் படர்தமர் வலியு
மருவுஞ் செவிகண் வாய்கோணல்
முட்டுப் படவே முறிந்தோடும்
முண்ட கபால சன்னியுமே 131

இதனை மேலுக்குப் பூசி, உள்ளேயும் சாப்பிட்டு வரவும். நல்ல தணலில் தூபமிடவும். காதில் சிறு துளிகள் விடவும். தமர் வலி, செவி, கண்புருவம் இவற்றில் வலித்து வாய்க் கோணலை உண்டாக்கும் கபால சன்னி முறிந்து விடும்.

158. பித்த குணம் - ~~மருந்து~~:

காலதலை வயிறு னெஞ்சு

கமர விழிமு கங்கள்

சாலவே சிரசில் நின்று

தள்ளெலள வறிந்து காட்டி

மேலெல்லாம் குத்தி நொந்து

மின்விளி யேறி யுங்கள்

வேலவே அரின லளரே

அறிந்துகொள் பித்தந் தானே 132

கால், தலை, வயிறு, மார்பு, கண், முகம், தலை இவற்றிலும் உடல் முழுதும் குத்தல் எடுக்கும் தன்மை கொண்டது இப்பித்தமாகும்.

மருந்து :-

159. கிட்டக் கல்லு காந்தமுடன்

கேளுஞ் சுக்கு மிளகுடனே

நாட்டும் நல்ல அமுக்கிராவேர்

நன்றாய்ப் பொடித்துச் சர்க்கரையில்

கூட்டித் தின்னப் பித்தமது

குடிபோ மென்றார் குறுமுனிவர்

தேட்டாரக் மாக நல்லதென்று

திடமாய்க் கொள்ளும் மானிடரே 133

இரும்புத்தூள், காந்தத்தூள், சுக்கு, மிளகு, அமுக்கிரா வேர் இவற்றை நன்றாகப் பொடித்துச் சர்க்கரையுடன் சேர்த்து உட்கொள்ள பித்தம் நீங்கிவிடும் என்பர்.

160. தலை முண்ட_தொண்ட_பித்தத்தின் குணம்

பித்தமே சிரசி லுற்றால்

    பின்வருங் குணங்கள் கேளாய்

உற்றதோர் நயனந் தானும்

    விழியது மாறி நிற்கும்

கயத்திடு நாக்குத் தானுங்

    கனக்குமே சிரசில் நின்று

நித்திரை தானும் வாரா

    நெடிய கொட்டாவி யாமே 134

பித்தம் தலையில் ஏற்பட்டால் அது பின்வரும் குணங்களைக் கொண்டிருக்கும். கண் விழியில் மாற்றம் ஏற்படும். நாக்குத் தடித்து கனமாகக் காணப்படும். தூக்கம் வராமல் துன்பப்பட்டு கொட்டாவி விட்டுக் கொண்டிருப்பர் என்பதாம்.

மருந்து :-

161. நெல்லிக்காய் மிளகு தானும்

    நெறிய மஞ்சான் கோட்டம்

நல்ல சந்தன மதிமதுரம்

    நற்புடல் கய்யான் பா லிளநீர்

நல்லெண்ணெ தன்னை யதில்விட்டு

    நன்றாயக் காய்ச்சி முழுகிவரச்

சொல்லிய பித்தம் போமென்று

    சுகமாய் முனிவர் சொன்னாரே 135

நெல்லிக்காய், மிளகு, மஞ்சாடி, கோட்டம், சந்தனம், அதிமதுரம், நற்புடல், கையாந்தகரை, பால், இளநீர் இவற்றைச் சம அளவெடுத்து நல்லெண்ணெய் சேர்த்து எண்ணெய் காய்ச்சி முழுகிவர தலையில் உண்டான பித்தம் நீங்குமென்பர்.

..69

162. பித்தகுணமும் மருந்தும்:

பித்தஞ் சுத்திக் கிறுகிறுத்துப்

பெருக்க நடக்கத் துயராகி

ஒத்த உருண்டை உடனிட்டு

உதிர்ந்த பாக்கில் கணியிட்டுச்

சித்தத்துள் நீருஞ் சிறுபயறுஞ்

சீரக முடனே சீனியுமாய்

மற்ற பசுப்பால் நெற்பொரியும்

அளவே கஷஞ்சி கொள்ளுவதே 136

தலைசுற்றல், கிறுகிறுப்பு, அதிக தூரம் நடக்க இயலாமை இவை பித்தத்தின் குணங்களாகும். சீரகம், சிறுபயிறு, சீனி சேர்த்து உருண்டை செய்து உண்ணலாம். அவ்வுருண்டையுடன் எலுமிச்சம்பழச்சாறு விட்டு உண்ணலாம்.

163. மிக்க மிளகு நேர்வாளம்

மிகுராம வேழு முத்து

குண்டை உருட்டிச் சூரிக்கா

யளவுந்த தேசிப் பழச்சாற்றில்

நன்றாயச் சுழற்றும் பித்தமதே 137

நெற்பொறி, பசும்பால், மிளகு, நேர்வாளம், இவை 10கி~~ராம்~~ அளவும் எழு ஆமணக்கு முத்தும் சேர்த்துப் பொடித்து உருண்டை செய்து எலுமிச்சம்பழச்சாற்றில் உண்ண சுழற்றும் பித்தம் நீங்கும்.

பேதி மருந்து :-

164. பித்தமுத லய்யம் சுரவ்க்கம்

பெருத்த வாயூ சலமறிப்பு

சுத்த முறவே விரோசனமாய்ச்

சுகமா முட்டுக் களை தீர்க்கும்

மெத்த சுடவே வெவ்னீர்கொள்ள

விரோசிப் பாகுஞ் சத்திசெய்யும்

மெத்கமூ புரையெனு மிடத்தில்

மிகுந்த பசுபால் கழுஞ்சிகொடே 138

பித்தம், வாதம், ஐயம், சுரம், வாயு, சலக்கட்டு இவை தீர பேதிக்கு மருந்து கொடுத்து அதன்வழி சுத்தப்-படுத்தலாம். பின் வெந்நீர் கொண்டால் மேலும் பேதி கழிந்து, வாந்தி ஏற்படும். பேதி மிகுதியானால் பசும்பால் கொள்ள பேதி நிற்கும்.

165. வறட்சி பித்தகுணம் ~~இதழ்~~:

தலையும் வலித்து உடலுந்

தாதுங் கெட்டுத் தயருண்டா

மலையுந் திரிய வொட்டாது

அடுத்து மிகவே ~~மணமடிக்கு~~ கிறுகிறுத்து

உலையும் மிகவே மணமடிக்கு

மோடி அடங்கும் வறட்சிபித்த

கலையு மிகவே கற்றுணர்ந்து

கண்டே முனிவர் கழறினரே 139

தலை வலி எடுத்தல், உடலும் தாதும் கெடுதல், நடக்க முடியாமல் போதல், தலை கிறுகிறுத்தல், ஆகியவை வறட்சி பித்தத்தின் குணங்கள் என முனிவர்கள் கண்டறிந்து கூறினர்.

*. பேதிமருந்து கொடுக்கும் போது பசும்பால் வழங்குவது வழக்கில் இல்லை. இந்த வெண்பாவில் கூறியிருப்பது மாறாக உள்ளது.

166. சீதேவி யார குறுணி

செரும்பால் நாளி நெய்நாளி

மாது சதகுப்பை கொத்தமல்லி

வன்கோட்டஞ் செண்பக ப்பூத்

தாதகு சந்தனம் நற்சீரகஞ்

சாதிகற்கடக மோரோரி

――――களஞ்சுதான் சேர்த்து

தீதின்றி காச்சிக் குடித்திடுகில்

தீரும் வறட்சி பித்தமதே 140

பொன்னாங்காணி 5.2லி ~~ஊசி 1.3லிட்டர்~~, ~~செரு~~ம்பால் 1.3லி~~ட்டர்~~, நெய் 1.3லி~~ட்டர்~~, சதகுப்பை, கொத்துமல்லி, கோட்டம், செண்பகப்பூ, சந்தனம், நற்சீரகம், சாதிக்காய், கற்கடகசிங்கி இவை வகைக்கு ~~இவைக்கு~~ 10கி~~ராம்~~ எடுத்து ~~இவற்றைச்~~ சேர்த்து காய்ச்சி குடிக்க வறட்சி பித்தம் தீரும்.

167. ~~தாழாலையின் குணம் மருந்து:~~

முகமும் வீங்கிக் கண்வெளுத்து

மூச்சு நடக்கில் முட்டதுவாய்

முகமுந் துடித்து நாவறண்டு

அனுகுந் தாது கெட்டிருக்கும்

மிகவு மசனஞ் செல்லாது

மேனி வறண்டு வெளுப்பேறிஞ்

செகமே சொன்னோங் காமாலை

செய்யுங் குணங்க ளிதுகண்டாய் 141

முகம் வீங்குதல், துடித்தல், கண் வெளுத்துக் காணல், நடக்கும் போது மூச்சு முட்டுவது போன்ற உணர்வு ஏற்படல், நாவறட்சி ஏற்படல், தாதுகெடல், பசி எடுக்காமை, உடல் வறண்டு வெளிறிப்போதல் போன்றவை காமாலை நோயின் குறிகுணங்களாகும்.

168. ~~இரும்பு கிட்டம்~~

காந்த மொருபலங் கொண்டுவந்து
கையாந் தகரைச் சாற்றரைத்து
ஏந்து கற்றாழஞ் சாறதனி
லியல்பாய் மூன்று நாளரைத்து
வாய்ந்த திரிகடுகுப் பொடியுடனே
வாய்ப்பாய்த் தின்ன வல்லீராய்
சேர்ந்த காமாலை பாண்டுரோகஞ்
செரியாக் குணமுந் தீருமன்றே 142

~~35கிராம் இரும்புக் கிட்டத்தூ ள்~~, 35கிராம், காந்தத்தூளைக் ~~இவற்றை~~ கையாந்தகரைச் சாற்றால் ஒருநாள் அரைத்து, கற்றாழைச் சாற்றால் மூன்று நாள் அரைத்து வைத்துக் கொள்ளவும். திரிகடுகுப் பொடி சேர்த்து உண்ண காமாலை, பாண்டு, செரியாமை இவை நீங்கும்.

169. கைகால் வெதுப்புக்கண் மேல்வெளிறு
காமந் தாது கெட்டதுவும்
மய்யார் குழலாய் மாதவிடை
மாறல் பொருமல் வயிறுவலி நோவும்
பய்ய மறந்தே யேகிவிடும்
பரிவாய் முனிவர் பகர்ந்தபடி
செய்யுங் காந்த பற்பமொன்
தெளிந்து செய்வீர் செகத்திதோரே 143

கைகால், இவை வெதுப்படைதல், கண்வெளுத்தல், தாது கெடல், வீட்டுத்தூரத்தின் நாளில் மாற்றம் ஏற்படுதல், பொருமல், வயிற்றுவலி, இவை எல்லாம் சித்தர்கள் சொன்ன முறைப்படி செய்த காந்த பற்பத்தை உண்டால்தீரும் என்பர்.

## பாண்டுக்குத்தைலம்



170. கய்யாந் தகரை யாமணக்குக்

கற்றாழை கொடுப்பைப் புடோலமுடன்

வெய்ய நீர்முள்ளி சீந்தில்

வில்லங் குருந்தொட்டி வெட்பூலாத்

தய்யல் னையம் புளியிலை நெல்லிக்காய்

தாழை ஆல விழுசமன்

பய்ய யெண்ணை பாலிளநீர்

பரிவாய்த் கூட்டு மருந்துகேள் 144

கையாந்தகரை, ஆமணக்கு, கற்றாழை, கொடுப்பை,

புடோல் (புடலங்காய்) புடோல், நீர்முள்ளி, சீந்தில், குருந்தொட்டி, வெட்பூலா, புளியிலை,

நெல்லிக்காய், தழுதாழை, ஆலம்விழுது இவற்றைச்சமஅளவெடுத்து

அதே அளவு நல்லெண்ணெய், பால், இளநீர் இவற்றைச்சேர்க்கவும்.

171. நெல்லி கடுக்காய் தான்றிக்காய்

நேரிற் சீரகந் திரிகடுகு

--- நிம்பத்தோ லதிமதரஞ்

சொல்லுங் கோஷ்டட முந்திரிகை

தய்ய சந்த மிருவேலி லாமிச்சுடன் மோதம்

வல்லற செஞ்சந்தன லவங்கம்

வகையிரண்டு கழஞ்சு அதிற்சேர்த்து

கல்வித பதங்கண்டே காய்ச்சித்

தேய்த்தே முழுகக் காமாலை

பாண்டுபோ மென்றே 145

நெல்லி, கடுக்காய், தான்றிக்காய், சீரகம், திரிகடுகு, எலுமிச்சம்பழத்தோல், அதிமதுரம், கோட்டம், முந்திரிகை, சந்தனம், இருவேலி, விலாமிச்சு, ஓமம், சந்தனம், இலவங்கம், இவை முறையே 10கிராம் அளவெடுத்து முன்சொன்ன பொருட்களோடு சேர்த்து நல்ல பதத்தில் எண்ணெய் காய்ச்சி முழுக பாண்டு நோய் தீரும் என்பதாம்.

172. பாண்டு(வின்) ~~ரோகத்தின்~~ குணம்; ~~நெய் என்னெய்:~~

இருமலு மிளைப்பு நெஞ்சி

விடிப்பது மிகவு முண்டாய்ப்

பெருகவே நடக்கும் போது

மூச்சுமுட் டதுவே யாகும்

வெறுறங் கிறுகி றுத்து

மேனியும் வெளுத்த தைக்கில்

பெருகிடும் பித்த பாண்டு

வெனப்பல பேச லாமே 146

இருமல், இளைப்பு, நெஞ்சுவலி இவை மிகுந்து காணுதல். வேகமாக நடக்கும்போது மூச்சு முட்டுதல், கிறுகிறுப்புத்தோன்றல், மேனியில் வெளுப்பு தோன்றல் இவை பித்த பாண்டு நோயின் குறிகுணங்களாகும்.

173. நெல்லி நெய்:

நெல்லி பூசனி சதாவேரி

நெய்பா லிளநீர் சரிசரியாய்

சொல்லுங் கோஷ்ட மதிமதுரந்

துய்ய சீரகங் கச்சோலம்

மல்லி ஏலந் திரிபல திரிகடுகு

வாய்ப்பா (யோ)ரொன் றிருகழஞ்சு

மெலிதாய்க் காய்ச்சி பதமானால்

மேற்பொடி விட்டு வடிப்பதுகேள் 147

நெல்லி, பூசணி, சதாவேரி (இவற்றின் சாறு), நெய், பால், இளநீர் இவற்றைச் சம அளவு எடுத்துக் கொள்ளவும். கோட்டம், அதிமதுரம், சீரகம், கச்சோலம், கொத்துமல்லி, ஏலம், திரிபலை, திரிகடுகு, இவை முறையே 10கி அளவெடுத்து முன்சொன்ன பொருட்களுடன் சேர்த்துக் காய்ச்சி பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

174. கேளீர் சர்க்கரை முந்திரிகை
கிளரும் பலமே ஒரொன்று
தாளப் பாத்திரந் தனிலிட்டுத்
தருக வடித்துக் குடிப்பீராய்
வீழும் வீக்கம் பெரும்பாடு
விக்கலிரத்த பித்தப்பாண் டுடனே
வாழா தோடி மாய்ந்துவிடும்
வல்லி நெல்லி நெய்யிதுவே 148

சர்க்கரை, முந்திரிகை இவை முறையே 35கிராம் அளவு பொடித்து மேற்படி நெய்யில் போட்டு வடித்துக் குடிக்க வீக்கம், பெரும்பாடு, விக்கல், இரத்தபித்தம், பாண்டு இவை நீங்கும்.

175. பிரமி கரிப்பான் கற்றாழை
மின்னி லிச்சம் பாலிளனீர்
உரமே யெண்ண யிருநாழி
உகந்த சந்த மிருவகையும்
அரத்தை கோஷ்டம் நன்னாரி மதுரம்
அமுக்கிரா லாமிச் சிருவேலி
இதமாய்க் காய்ச்சித் தேய்ப்பீராய்
தலைநோய் பாண்டு தங்காதே. 149

பிரமி, கரிப்பான், கற்றாழை இவற்றின் சாறுகள், எ.ச்சம்பால், இளநீர் முறையே உ.6லி, இரண்டுவகைச்சந்தனம், அரத்தை, கோட்டம், நன்னாரி, மதுரம், அமுக்கிரா, விலாமிச்சம், இருவேலி இவற்றுடன் ~~1.3லிட்டர்~~ உ.6லி நல்லெண்ணெயையும் சேர்த்துக்காய்ச்சி தலைக்குத் தேய்த்து முழுக தலைநோய், பாண்டு இவை நீங்கும்.

176. ஊட்தாய்ச்சல்_குணம்_மருந்து:_

வற்றிமேல் வெளுக்கும் பித்தம்

மயங்கிடுஞ் சோப தாபம்

பற்றியே அனலந் தோன்றிப்

பகலிர விசலங் காயு

முற்றதோர் குளிர்வெ டுக்கு

முடலெனும் விறகிற் கற்றும்

முற்றியே அனலே ஈது

முழுதும்உள்க் காச்ச லாமே 150

மேனி வெளுத்தல், பித்தம், பித்தத்தால் மயக்கம் ஏற்படல், சோபம், தாபத்துடன் உடலில் அனல் எழுதல், பகலிலும், இரவிலும் சுரம் காய்தல், குளிர் எடுத்தல், போன்ற குறிகுணங்களைக் காட்டும். இது உட்காய்ச்சலாகும்/ என்பர்.

177. ஆவின் பாலுட னன்புறு சீனியும்

மேவு சமுத்திர வேதியு மாகவே

தாவு நாற்பது நாளது தான்குடிப்

பாவும் உள்சுரம் ஓடிப் பறக்குமே 151

பசும்பால், சீனி, சமுத்திரவேதி இவற்றைச் சேர்த்து 40 நாட்கள் பருகி வர உட்காய்ச்சல் நீங்கும்.

..77

178. பாலுட னிளநீ ரோடு
    பழம்பாசி நீர்நெய் னாலிழ்
ஆலுடன் சதா வேலிநீ
    ரதினொப்பங் கூட்டிக் கொண்டு
வாலுளுவை சந்தம் வேலி
    மிச்சமுங் கோட்டம் பச்சை
சாலவே மதுரம் ரோணி
    சமனதுங் கூட்டி நக்கே 152

பால், இளநீர், பழம்பாசி, ச்சாறு, நெய் இவை முறையே சதாவேரி இவை வகைக்கு 1.3லி,
1.3லிட்டர், ஆலங்கொழுந்து, வாலுளுவை, சந்தனம், இரு-
வேலி, கோட்டம், திருநீற்றுப்பச்சை, அதிமதுரம், கடுகுரோகணி,
இவை சம அளவு எடுத்துக் அரைத்துக் கொள்ளவும். அனைத்தையும் சேர்த்துக்
காய்ச்சி தலை முழுகிவந்தால் உட்சுரங்கள் விடும்
என்று முனிவர் இயம்பினர்.

179. எண்ணை பாலு மிளநீரு
    மித்தொடு கூட்டி நன்றாய்
வண்ணமாஞ் சந்தங் கோட்ட
    மதரமு மரைத்துச் சேர்த்து
திண்ணமாய் முழுகி வந்தால்
    தியங்கிடும் உள்சு ரங்கள்
உண்மையாய் விட்டுப் போமென்
    றுரைத்தனர் முனிவர் தாமே 153

சந்தனம், கோட்டம், அதிமதுரம், இவற்றை அரைத்து,
நல்லெண்ணெய், பால் இளநீர் இவற்றைச் சேர்த்து தலை முழுகி
வந்தால் உட்சுரங்கள் எல்லாம் விட்டுப் போகும் என்று முன்னோர்
மொழிந்தனர்.



* குறிப்பு:- இரண்டு பாடல்களிலும் கடைச்சரக்குகள் ஒன்றாகச் சொல்லப்பட்டுள்ளதால் உரை ஒன்றாக கொடுக்கப்பட்டுள்ளது.

180. பித்தகுணம் :- மருந்து:

பரபரத் துடல்க னத்து

பரந்துடல் தடித்தி ரைந்துக்

கரகரத் துளைந்து நெஞ்சு

கனப்புட இளைப்பு மூச்சுச்

சரசரக் சொறிந்தி மிந்து

தியங்குநீர் செரியும் வெற்றப்பும்

வரவர இருமல் கோபம்

வந்ததாம் பித்த மென்னே 154

பரபரப்புத் தோன்றும். உடல் கனக்கும். உடல் தடிக்கும். இரைந்து, கரகரந்து, உளைந்து, நெஞ்சு கனத்து, இளைப்பு, மூச்சுச் சிக்கல் ஏற்பட்டு நீர் அடிக்கடி சுரக்கும். இழிவும், இருமல் அடிக்கடி ஏற்பட்டு கோபமும் உண்டாகுமானால் அது பித்தம் எனலாம்.

181. பித்தகுணம் _மருந்து:

வெற்றிலை கொத்தாளி கையாளி

வேளைபுடல் நெல்லி தேசி

கற்றாழை யவுரிக்கொடி யென்ன

கனக்கொரு படியிற் கரைத்திடு மருந்துகேளிர்

முத்தமுங் கடுக்காய் சுக்கு

மோதகஞ் சாரணைவேர் முந்திரி மிளகரத்தை

சித்திரப் பாலாடை அதிமதுர யிருசீரகத்தோடு

சேரிரு களஞ்சி ரணமே. 155

வெற்றிலை, முடக்கொத்தான், கையாந்தகரை, தைவேளை, புடல், நெல்லி, எலுமிச்சம்பழம், கற்றாழை, அவுரிக்கொடி இவற்றை முறையே ஒவ்வொரு படி அரைத்து கரைத்துக் கொள்ளவும். முத்தக்காசு, கடுக்காய், சுக்கு, ஓமம், சாரணைவேர், முந்திரி, மிளகரணைவேர், மிளகு, அரத்தை, சித்திரப் பாலாடை, அதிமதுரம், நற்சீரகம், பெருஞ்சீரகம் இவற்றில் முறையே 10கிராம் எடுத்துச் சேர்க்கவும்.

வகைக்கு 1.3லி/

182. முப்பட மருந்து தன்னை

முப்பட எடுத்தி டித்து

தப்பறா வல்லா ரைச்சார்

தனிலரைத் ததிலே சேர்த்துச்

செப்பமாய்க் காச்சித் தேய்ச்சால்

சிரசில்னோய் ரத்த பித்தம்

முப்படும் வியாதி யெல்லாம்

முறிந்துதோ மென்று முனியுரைத்தார் 156

மேற்கூறப்பட்ட மருந்துகளை நன்கு இடித்து வல்லாரைச் சாறு கொண்டு அரைத்துச் சேர்த்துக் காய்ச்சித் தலையில் தேய்த்து வர தலைநோய், இரத்தபித்தம் போன்ற நோய்கள் நீங்கும்.

183. இந்த எண்ணெய் யுரியளந்து

எலுமிச்சு நெல்லி மொசுமொசுக்கை

இருநா யுரிநீ ரதிற்சேர்த்து

வெந்தயஞ் சுக்கு கடுக்காய்

வெண்கார மிந்து மிளகேல மோரோர் கழஞ்சு

செந்தெங் கிளநீ ரதிலரைத்துச்

சேர்த்துக் காய்ச்சிக் குடிப்பீராய்

வந்த ரத்தபித்த வாய்வுமூலம்

மற்ற வியாதியும் மாறுமென்றார் 157

மேற்கூறிய எண்ணெயில் 650மிலி எடுத்துக்கொள்ளவும். இவற்றின் சாறு தனைச் சேர்க்கவும். எலுமிச்சம்பழம், நெல்லிமுள்ளி, முசுமுசுக்கை, நாயுருவி, வெந்தயம், சுக்கு, கடுக்காய், வெண்காரம், இந்துப்பு, மிளகு, ஏலம், இவற்றில் முறையே 5கிராம் எடுத்துக் கொள்ளவும். இவற்றை எடுத்து செவ்விளநீரில் அரைத்து எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சிக் குடிக்கவும். இதனால் இரத்த பித்தம், வாய்வு, மூலம் இவை தீரும்.

184. சிலேஷ்ம குணம் ~~[illegible]~~

ஈதலா யுடலந் தன்னி

ராமென விசைந்து காட்ட

மாதுற முகம்பெ ருக்கும்

மலஞ்சலங் கழிந்தென் னாளும்

போதமும் விரும்பி டாது

பூந்தியில் வலியுந் தோன்றுந்

தூ தனா ரருளிச் சொன்ன

துலங்கிய சிலேற்பனந் தானே 158

சிலேஷ்ம உடலில் அடிக்கடி வேர்வை அரும்பும். முகம் வீங்கும். அடிக்கடி மலசலம் கழியும். உணவை விரும்பிடார்கள். வயிற்றிலும் வலி தோன்றும். இவை சிலேஷ்ம உடலின் குணங்களாகும்.

185. இவ்வகைத் திணங்கி நிற்கு

மிருமிய சிலேஷ்ம மோடு

தவ்விய காசத் தோடு

தயங்கிய சிலேஷ்ம மெட்டு

ஒவ்விய பித்தத் தோடு

உன்னிய சிலேஷ்மமி ரண்டு

கவ்விய வாதத் தோடு

கலந்திடு மிரண்ட தாமே 159

இருமலோடு சிலேஷ்மமும், காசத்தோடு சிலேஷ்மமும் சேர்வன எட்டாகும். பித்தத்தோடு சேரும் சிலேஷ்மம் இரண்டு, வாதத்தோடு கலந்திடும் சிலேஷ்மம் இரண்டாகும்.

186. இப்படி சேற்ம மங்க

விருப்பது நிலையி லானாற்

றப்பிடு முடல மிறக்குந்

தவறிடா மருந்து சொல்வோம்

அப்பிரு காரங் கிட்டம்

மரைப்பொடி காந்த மொன்றாய்

செப்பிடும் தேசி நீரால்

சேர்த்தரைத் தொருபுடம் போடே 160

இப்படி சேற்மமங்கள் சேர்ந்திருப்பது நிலையானால் பின்வரும் மருந்து உட்கொண்டு குணப்படுத்தலாம். அப்பிருகாரம், கிட்டம், அரைப்பொடி, காந்தம் இவற்றை எலுமிச்சம் பழச் சாற்றாலரைத்து ஒருபுடம் போடவும்.

187. தீப்புட மிட்டெ டுத்து

திரிபலை திரிகடு குடனே

வாய்ப்புடன் சமனாய்ச் சேர்த்து

வண்மையா அறிந்தெ டுத்து

ஆப்புடன் கய்யான் நீரில்

அஞ்சுசாம மரைத்தருந்த

சீப்படுஞ் சிலேற்பம ரோகம்

திரிதோஷந் தீருமென்றே 161

புடமிட்ட அம்மருந்தை எடுத்து திரிபலை, திரிகடுகு, இவற்றைச் சம அளவு எடுத்து கையாந்தகரைச் சாற்றில் 15 மணி நேரம் அரைத்துச் சாப்பிட்டு வந்தால் சிலேற்பம நோய்கள், திரிதோடம் இவை நீங்கும்.

188. ஆனதி லதிக மானா

வஞ்சது சுரங்க ளுண்டாம்

தானது இறுதி கண்டுந்

தன்னுயிர் பயங்க ளாலும்

மேனியில் முறிவி னாலும்

மின்னமேல மயிலி னாலும்

கானலே ப்டை யாலும்

கற்பித்தம் புழக்கை யாலும் 162

திரிதோடம் அதிகமானால் ஐந்து வகையான சுரங்கள் உண்டாகும். இதுதான் இறுதிநிலை என்று எண்ணி, அதனால் ஏற்படும் பயத்தினாலும், பித்தம் புழக்கத்தில் உடலில் உள்ளதாலும் இவ்வகைத் துன்பங்கள் உண்டாகும்.

189. இதுக்குடன் மருந்து மாற

இவையில்முச் சுரங்கள் வந்தால்

சதிர மானின் நாவு

சங்கையாய்க் கரிந்து காட்டும்

பதித்தபார்வையுங் கலங்கிப்

படைகள்போல் குத்தி நோகும்

முதித்த மூச்சு வாங்கமுண்டாம் 163

முற்ற சரீரமும் விரையலுண்டே

இவ்வகையில் திரிதோட சுரங்கள் ஏற்பட்டால் நாவில் வலி ஏற்பட்டு, கருப்பாகக் காணும், கண்ணில் கலக்கம் ஏற்பட்டு, உடம்பெல்லாம் குத்தி நோகும், மூச்சு வாங்கும். உடம்பிலும் ~~விரையல்~~ விரைப்பு உண்டாகும்.

190. வாத சுரத்தின் குணம்:

வாத சுரத்தின் குணங்கேளீர்
மயிருஞ் சிலிர்த்து தலைநொந்து
போத நடுக்கல் கீழ்முதுகு
பொருந்துங் கைகாலுளையுங்
காதல் பெருத்த தண்ணீர்
கருதுந் தலைநோய்க் கட்டுடனே
வீந் பெருத்த மலஞ்சலமு
மிகவும் கடுக்கும் மெல்லியரே 164

உடல் மயிர் சிலிர்த்து, தலைநொந்து, நடுக்கல் ஏற்பட்டு, கீழ்முதுகு, பொருத்துகள், கால், கை இவற்றில் உளைச்சல் ஏற்பட்டு, தலையில் நீரேற்றம் கொண்டு, தலை நோக்காட்டுடன், வயிறு கடுத்து மலசலம் கழியும்.

191. வாத சுரத்தின் குணங்கேளீர்
வகுத்த வன்ன முரைத்திடவே
சீத சுரமாய் வந்திட்டுச்
சிந்தை கலங்கும் மெய்யிறங்கும்
பாதந் தன்னில் வருஞ்சுரமும்
பயந்து அசந்து விழுமாய்போல்
பேதம் பெறவே களையுமுறும்
பெருக்கப் பசியுந் தோன்றாதே 165

வாதத்தினால் ஏற்பட்ட சுரம், சீதசுரமாய்க் காணப்படும். சிந்தை தடுமாற்றம் அடைந்து, உடல் மெலிந்து, சுரமானது பாதம் வரை மிகுந்து பரவும். பயம் ஏற்பட்டு அதிகமாகப் பசியும் எடுக்காது.

192. நடுக்கித் தியக்கி மயிர்ச்சுச்சிட்டு
நமுவுந் தலையு மிகநொந்து
கடுக்குங் கைகால் முறிநிமிர்ந்து
கண்ணுந் தோளும் மிகநோவாம்
திடுக்கிட்டு தடும்வாய் நீர்வற்றி
செற்ப வறிய-மேற் சுவாசந்தான்
துடுக்கென வந்த போதே
வாதசுர மென்று சொல்லலாமே 166

உடலில் நடுக்கம் ஏற்பட்டு மயிர் கூச்சிடும். தலையில் வலி ஏற்படும். கை, கால்கள், கடுக்கும். கண்ணும், தோளும் மிகுந்த நோகும். அடிக்கடி திடுக்கிட்டு மீளும். வாயில் ஊறும் உமிழ்நீர் வற்றி, வறிய மேல்சுவாசம் ஏற்பட்டால் அது வாதசுரம் என்று அறிந்து கொள்ளலாம்.

193. வாத சுரத்தின் குணங்கேளீர்
வந்து குளிர்த்தல் பயப்படுத்தல்
சீத மிகுந்து துரைக்கரிதல்
சொரிந்த ரோமஞ் சிவப்பெறிதல்
சேதங் கண்டு தலைநோவுந்
திருந்துந் தொப்புள் சலங்கடுத்தல்
பாத முனைந்து நீர்குடிப்பார்
பலகால் வெதுப்பும் விடாதிதுவே 167

வாத சுரத்தின் பின்கண்ட குறிகுணங்களைப் பெற்றிருப்பர். உடல் குளிரும், உடல் உரோமங்கள் சில்லிட்டு சிலிர்க்கும். தலையும், கொப்பூழும் நொந்து, நீர்க்கடுத்து இறங்கும். அடிக்கடி தாகம் ஏற்பட்டு தண்ணீர் குடிப்பர்.

~~194~~.விடாதே கைகால் கீழ்முதுகு

மிக்கவிரண்டு விரல்புறமுந்

தொடாதே திரங் குடலதுவுந்

தொடுகிற் புரைபோல் வோவுண்டாங்

குடாதே கஞ்சி எழுதினந்

கொடுத்தா லதிக சுரமுமுண்டாம்

அடாதே மிகவும்கண்டுடலில்

அடுக்கும் வாத சுரமாமே 168

கைகால், கீழ்முதுகு இரண்டு பக்கத்தின் விலாப்புறங்கள் நோகும்.வயிற்றில் தொட்டாலே புண்ணைத் தொட்டது போன்ற வலி ஏற்படும். இவர்கட்குக் கஞ்சி தரலாகாது.(அரிசிசாதம் தவிர்த்தல் நல்லது).ஏழுநாள் கொடுத்தால் அதிகமான சுரம் உண்டாகும். இது வாதசுரம் என அறியலாம்.

~~195~~. ஆமே யேழு நாளளவு

மசனந் தொடாதே பட்டினியாய்

தோமே யிந்த கஞ்சித் தண்ணீர்

சொன்ன படியே தானதுவும்

ஆமே யெழு நாள்கழித்தால்

அடாதே வந்த சுரந்தானும்

போமே யேழு நாள்கழித்தால்

பொருந்து மசனங் கொடுப்பதுவாம் 169

ஏழுநாள் அளவும் உணவைத் தொடாதிருந்தால் வாதத்தால் வந்த சுரம் நீங்கி சுகம் உண்டாகும். எனவே ஏழு நாட்கள் அரிசி சாதம் தவிர்த்து விடுதல் நலம்.

196. ஆமே வாத சுரந்தனக்கு
அமுத சிறுகாஞ் சொறிமுத்தம்
மீமே சுக்கோ டொவ்வொன்று
மீரு தேழுன் றிதுகழஞ்சு
தாமே நாலு நாழித்தண்ணீர்
தனைக்குறுக்கி வுழக்காக்கி யருந்தப்
போமே வாத சுரமென்று
பொன்னே முனிவர் புகன்றனரே 170

வாத சுரத்திற்கு மருந்து கூறுகிறது இப்பாடல். சீந்தில், சிறுகாஞ்சொறி, முத்தக்காசு, சுக்கு, இவை நான்கையும் மூன்று கழஞ்சு (15கி) எடுத்து 5.2லி தண்ணீர் விட்டுக் காய்ச்சி 320மி.லியாய்ச் சுருக்கிய குடிநீரைப் பருகிவர வாதசுரம் நீங்கும்.

197. விஷசுரக்குணம்:
ஒருவிடங் குளிருங் காயும்
ஒருவிட முடம்பு தன்னி
லருகுறத் தொடுத்துப் பார்க்கி
லதிகமாய்க் காய்ந்தி ருக்கும்
பெருகிடுந் தண்ணீர்த் தாகம்
பின்னையு மன்னஞ் செல்லாது
வெருவுறப் பத்தி யேறும்
விஷசுர மென்ன லாமே 171

விஷசுரத்தின் குணங்கள் பின்வருமாறு. உடலில் ஓரிடத்தில் குளிரும். ஓரிடத்தில் சுரம் காயும். வேறு ஒரு இடத்தில் மிக அதிகமான சுரம் காணப்படும். தண்ணீர் தாகம் மிகுந்திருக்கும். உணவில் விருப்பம் கொள்ளாது.

198. மெய்யில் விஷசுரமே வந்தாக்கால்
விட்டு விட்டு வெதும்புங்கால்
கையும் வெதும்பு முடலெல்லாம்
கருத்தே இருக்கு முழலையுமாம்
பய்ய வந்தே பார்ப்பவரை
பயந்தே கட்டிக் கொள்ளெனும்
அய்யோ பிழையே யென்னுஞ் சொல்லும்
அதிக மாகுஞ் சுரந்தானே 172

விஷசுரம் வந்தால் உடல் விட்டு விட்டு வெதும்பும். கால், கையும் வெதும்பும். உடல் கருத்திடும். உழலை ஏற்படும். தன்னை வந்து நலம் விசாரிக்க வந்தவரைக் கட்டிக் கொள்ளும். பிழைசெய்துவிட்ட உணர்வு தோன்றும். இது விஷசுர குணமாகும்.

199. ஒன்று ரண்டினில் மூன்றுநா லாறினில்
என்று ஏழினில் எட்டினில் பத்தினில்
நின்று நின்று நில்பர மாய்வரும்
என்று செய்யும் விஷசுர மென்பதே 173

விஷசுரமானது ஒன்றில், இரண்டில், மூன்றில், நாங்கில், ஆறில், ஏழில், எட்டில், பத்தில் (நாட்களில்) நின்று நின்று வரும், தன்மை கொண்டதாகும்.

200. சடங்க மிருவேலி பற்படாகம் நிலவேம்பு
சந்தன மிலாமிச்ச முத்தம்
இடங்க டுக்காய்ட் வேர்க்கொம்பு
இருநாழி வெள்ள முழுக்காய்க் காய்ச்சி அருந்திட
அடங்குஞ் சுரமும் முழலை தண்ணீர்த்தாகம்
சினம்போம் யம்மை யுமையனைத்
தடங்கண் மாதே தயங்காதே
தானே சுரம்போ மென்றாரே 174

இருவேலி, பற்பாடகம், நிலவேம்பு, சந்தனம், விலாமிச்சம், முத்தக்காசு, கடுக்காய், ~~அதன் வேர் கொம்பு~~ சுக்கு இவற்றை இடித்து 3லிட்டரில்யாய்க ~~2.6லிட்டர்~~ தண்ணீர் விட்டு ~~உழக்களவு~~ குறுக்கிக் காய்ச்சி அக்குடிநீரை அருந்தவும். சுரம் நீங்கி உழலை குணம் பெற்று தண்ணீர்த் தாகம் மட்டுப்படும். நோயால் வந்த சினமும் போமென்று அறிந்துகொள்ளவும்.

201. பித்த சுரத்தின் குணம் ~~குருத்த~~:
பித்த சுரத்தின் குணங்கேளீர்
பிதற்றும் வெதும்பும் உலழுற்றும்
மெத்த தண்ணீர் தாகிக்கும்
மிகவாய் கைக்கும் நாவுலரும்
ஒத்த சிறுநீர் மலந்தானும்
ஒளிசேர் நன்றாய்ச் சிவந்திருக்கும்
சுத்தி யடங்கும் முகங்கழக்கும்
சொல்வா யிடழிப் புண்ணாமே 175

வாய்பிதற்றல், வெதும்படைதல், உடல் அழற்சி ஏற்படுதல், தண்ணீர்த்தாகம் மிகுதல், வாய் கைப்பேற்படல், நாவுலர்தல், நீரும் மலமும்சிவந்து காணப்படல், முகம் கழத்தல், ~~சிலவிடங்களில் புண்~~ வாய், நாக்கு புண் ஏற்படல் ஆகியன பித்த சுரத்தின் குறிகுணங்களாகும்.

202. பித்த சுரங்கள் பிலஞ்செய்யும்
பருக்கவயிற்றாகிக் கழியும்
மெத்த நாறும் மலந்தானும்
மேவிக் குளிரும் படவேண்டும்
சுத்த அன்னந் தான்வேண்டாம்
உகந்த தண்ணீர் மிகப்பருகும்
சுத்த மாக விதுதானுஞ்
சொல்லும் பித்த சுரமென்றே 176

பித்த சுரங்கள் ______ ஏற்படுத்தும். வயிறு இரிழிந்து கழியும். மலம் மிகுதியாக நாற்றமெடுக்கும். குளிர் உண்டாகும். உணவை உண்ண விருப்பமிராது. ஆனால் தண்ணீரை மிகுதியாக விரும்பிப் பருகும். இவை பித்த சுரங்களின் குணமாகும்.

203. பித்த சுரத்தின் குணங்கேளீர்
பெருகத் தண்ணீரது வாங்கும்
முத்தக் காசு அரசந்தோல்
உழக்காய்க் காய்ச்சி யதுவாத்தி
மெத்தப் பருகு மதுதானும்
வேண்டும் போது கொள்வீரால்
பித்த சுரமும் ~~வயத்தினிவும்~~ வயிற்றிழிவும்
பின்னிட் டோடுங் கண்டீரே 177

அதிதாகம் ஏற்பட்டு மிகுதியாகத்தண்ணீர் பருகல் பித்த சுரத்தின் ஒரு முக்கிய குணமாகும். முத்தக்காசு, ~~அரசந்தோல்~~ அரசம்பட்டை இவற்றை நீரிட்டு எட்டிலொன்றாகக் குறுக்கி 325 மி.லியாய்க் காய்ச்சிக் குடிநீராக்கிப் பருகிவர பித்த சுரமும் வயிற்றுப் போக்கும் நீங்கி விடும்.

204. அறியோ மென்னா சீந்தில்சுக்கு

ஆன சேகவ விருவேலி

உறுதி யான லாமிச்சு

யோரொன் றதவு முக்கல்ஞ்சு

அறியோ நாமென் றெண்ணாதே

அறிவா யரத்தைக் காய்ச்சி யெட்டொன்றாய்

பொரியாய்த் தூவி திப்பிலியை

போட்டுக் குடிக்கப் போஞ்சுரமே 178

சீந்தில், சுக்கு, விலாமிச்சு, திப்பிலி, இவை வகைக்கு கழஞ்சு வீதம் 3 கழஞ்சு எடுத்துக் கொள்க. நீர்விட்டு எட்டில் ஒன்றாய்க் குறுக்கிக் காய்ச்சி அதில் திப்பிலியைப் பொடித்துத் தூளைப்போட்டுக் குடிக்கச் சுரம் போகும்.

205. தாக பித்த சுரத்தின் குணம்:

வஞ்சமிகக் கண்ணும் பல்லும்

மலமுடன் சலமும் மெய்யும்

மஞ்சனித் திருக்கும் வாயு

முடுக்கும் நீர்வாங்கும் போத

அஞ்சே எரித்தே மிகக்குறளும்

மேவும் பித்த சுரந்தானே 179

கண், பல், மலம், சிறுநீர் இவை மஞ்சள் நிறத்துடன் காணப்படும். வாயு மிகுந்து நீர்வாங்கும். உடல் எரிச்சலை உண்டாக்கும் குணம் தாக பித்த சுரத்தினதாகும்.

206. போமே தான்றி கடுக்காய்நெல்லி
போற்றும் தாமரை இலவங்கம்
மாமே கொண்டைத்தோ லறுகழுஞ்சு
மற்ற திருக்க முஞ்சு
நாமே தகத்திரு நாழிநீர்
நய்ய வெந்திட் டுழக்காக்கி
தாமே திப்பிலி தூ விக்கொள்ள
தக்க சுரமுந் தங்காதே 180

தான்றி, கடுக்காய், நெல்லிக்காய், தாமரை,
இலவங்கம் இவை வகைக்கு 10கி, கொண்டைத்தோல் 30கி இவற்றை 2.6லி
நீர்விட்டுக் குடிநீராக்கிக் கொள்ளவும். அதில் திப்பிலிப் பொடியைத்
தூவிப் பருக தாகபித்தசுரங்கள் நீங்கும்.

207. வாதபித்த சுரத்தின் குணம் ~~மருந்து~~
கையைக் கொட்டிப் பாடுவதுங்
கண்ணை இமையா லொளிப்பதுவும்
மெய்யே முழுதும் வலிப்பதுவும்
கெ....ண்டதெல்லா முறைப்பதுவும்
பய்யச் சீறி னொடிப்பதுவும்
பகர்ந்தே வாக்குப் பகருவதும்
மையைப் பொருந்தி கண்மடவார்
வாதபித்த சுரந்தானே 181

வாதபித்த சுரங் கண்டோர்கைகொட்டிப் பாடுதல்,
கண்ணச் சிமிட்டி இமையை மூடி மூடி திறத்தல், உடல் முழுதும் வலி
தோன்றல், கண்டதெல்லாம் முறைத்துப் பார்த்தல், சீற்றம்,
பின்தவிப்பு, சொன்னதைத் திரும்பத் திரும்பச்சொல்லுதல்
போன்றவை வாதபித்த சுரத்தின் குணமாகும்.

208. திரிகடுகு திரிபலை ஏலஞ்

செண்ப கப்பூ லவங்கம்

மருபடி னாகப் பூவும்

மதுரங் கோட்டம் வில்வம்

நறிய நன்னாரி சீந்தில்

நாலிரண் டொன்றாய்க் காய்ச்சி

அறியவே எட்டுப்போ தருந்த

வாத பித்த சுரமாமே 182

திரிகடுகு, திரிபலை, ஏலம், செண்பகப்பூ, இலவங்கம், நாகப்பூ, மதுரம், கோட்டம், வில்வம், நன்னாரி, சீந்தில், இவற்றைப் போட்டு நீரிட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி எட்டுவேளை அருந்த வாத பித்த சுரம் நீங்கும்.

மேற்படி:- சுக்கு, சீரகம், ஏலம், நெல்லிப்பருப்பு வறுத்துப் பொடித்து சீனியும் மேற்பொடியாகப் போட்டு குடிநீரைக் கொடுக்கவும்.

209. சிலேற்பும சுரத்தின் குணம்

ஆகாத வுண்டி யெல்லாம்

ஆசரித் தடைத்து விம்மி

போகாத வெதுப்புத் தோன்றும்

புத்தியை மயக்கும் போதப்

பாகரு மொழியி னாளே

பகர்ந்திடப் பரிந்து கொள்ளாய்

சோகமே மீறுஞ் சிலேற்பும

சுரமென விளம்ப லாமே 183

தமது உடம்பிற்கு ஆகாத உணவை உண்டு வயிறு புடைத்து, உடலில் வெதுப்பு தோன்றி, புத்தி மயங்கி, சோகம் மட்டுமே மீறும். இவை சிலேற்பும சுரத்தின் குணமாகும்.

210. முக்குநீர் வெள்ளோக் காளம்

பொடுகு நீர்முச் சுண்டாம்

தேக்கிடும் வாய்நீ ருண்டாம்

தித்திப்புக் குளிருஞ் செய்யும்

பார்க்கிற போதுங் கண்ணும்

பருத்துடல் மாச்சல் உண்டாம்

தீக்குணம் போலெ ரிக்கும்

சிலேற்ஷ்ம சுரமே தன்னே 184

முக்குநீர் வழிதல், வெள்ளைவெள்ளையாக ~~ஒக்காளம்~~ ~~வாந்தி~~ ஏற்படல், தலையில் பொடுகு உண்டாகல் ~~முர்ச்சை~~, மூர்ச்சை ஏற்படல், வாய்நீர் மிகுதியாக ஊறல், வாய் இனித்துக்காணுதல், உடல் குளிர்தல், கண்ணில் வீக்கம் தோன்றி தீக்குணம் போல எரிக்கும் குணமுடையது சிலேற்ஷ்ம சுரம் என்பர்.

211. அன்னமே சிலேற்ப னத்துக்

கடையாளம் உடம்பு வேர்க்கும்

முன்னிய சிறுநீர் தானும்

உண்மையா யுடைந்து வீழும்

மன்னிய தேகந் தானும்

மயக்கமாய் விடுக்கு மென்க

பண்ணிய சிலேற்ப னத்தின்

பயனிது வறிந்து கொள்ளே 185

அன்னம் சிலேற்பனத்தின் அடையாளம். உடம்பு வேர்த்தல், சிறுநீர் மிகுதியாகக் கழிதல், அடிக்கடி மயக்கம் தோன்றல் போன்றவை சிலேற்பனத்தின் குணங்களாகும்.

குடிநீர்:-

212. மங்கைகேள் தாமரை அல்லி

வளருங் கழுநீர் மஞ்சிட்டிமதுரம்

நங்காய் சொல்லும் நன்னாரி

நாலும் இலுப்பைப் பூவுடனே

சிங்கா தோரொன் றிருகழஞ்சு

சேரக் காய்ச்சி யெட்டொன்றாய்

பங்கமிலாத் திப்பிலி தூவி

பருகச் சுரமும் பாழாமே 186

தாமரை, அல்லி, செங்கழுநீர், மஞ்சிட்டி, மதுரம், நன்னாரி, இலுப்பைப்பூ இவற்றை ஒவ்வொன்றும் முறையே 10 கிராம் எடுத்துக் கொண்டு இடித்து நீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி திப்பிலிப் பொடி தூவிப் பருக சுரம் நீங்கும்.

213. அத்தி சுரத்தின் குணம் ~~மருந்து~~:—

ஆமே சுரத்தின் குணங்கேளீர்

அதிக மாக வெதும்பாமல்

சாமந் தோறும் வெதும்பிவிக்கும்

தனியே யுறக்கந் தானுண்டாம்

சேம மாக வுடம்புழன்று

சீரி யிருக்கும் பசியில்லை

நாமந் தளரும் உடல்நோயும்

நடுங்கி இருக்கு மிதுவாமே 187

அத்திசுரம் கண்டால் உடம்பு ஒரே நேரத்தில் அதிக-மாக வெதும்பாமல் இரவு முழுவதும் ~~உடம்பு~~ வெதும்பிக் கொண்டே-யிருக்கும். தனியே படுத்து உறங்கிக் கொண்டே இருக்கத் தோன்றும். உடம்பு உழன்று காணப்படும். பசி எடுக்காது. உடலில் நடுக்கம் ஏற்படும். ஆகிய இவை அத்தி சுரத்தின் குணங்களாகும்.

214. ஆமே நல்ல கடுக்காய்நெல்லி
யருகும் வீழி இருவேலி
தாமே சொல்லும் லாமிச்சம்
சாமுந் தாமரைக் கிழங்குடனே
ஓமே யோரொன் றிருகழஞ்சு
ஒளிரு நீரும் யெட்டொன்றாய்
வேமே வெந்தால் குடிப்பீரே
வினைக ளொன்றும் வாராதே 188

கடுக்காய், நெல்லிக்காய், வீழி, இருவேலி, விலாமிச்சம், தாமரைக்கிழங்கு இவற்றை முறையே 10 கி எடுத்து இடித்து வேண்டிய அளவு நீர்விட்டு எட்டிலொன்றாய்ச் சுருங்கும்படி குடிநீர் இறக்கிக் குடிக்க அத்திசுரம் தீரும்.

215. அத்தி சுரத்தின் குணங்கேளீர்
அழலும் வெதம்புங் கண்சிவக்கும்
சத்தி யெடுக்குந் தலைகனக்கும்
சந்து தோறும் நொந்துடல்தான்
வற்றி யிருக்கும் வயிரெறிக்கும்
மாதே வேதப்படி யிதென்று
யுத்த மாகப் பொதியமலை
முனிவ ருரைத்தா ருண்மையிதே 189

அத்திசுரம் கண்டோர்க்கு உடல் அழற்சி ஏற்படும். உடலில் வெப்பமுண்டாகும். கண் சிவக்கும். வாந்தி ஏற்படும். தலை கனக்கும். சந்துகளில் எவ்வாம் வலி ஏற்படும். உடல் வறண்டிருக்கும். வயிற்றில் எரிச்சல் ஏற்படும் என இதன் குறி-குணங்களை அகத்தியர் உரைத்துள்ளார்.

குடிநீர் :-

216. இந்த அத்திச்சுரந்தனக்கு
யிதமாய்க் குடிநீர் தனைக்கேளாய்
அந்த அத்தி வெந்தோலான்
ஆன சந்த யிருவேலி
வந்த பயறு கடுக்காயும்
மதுரங் கொத்த மல்லிசுக்கு
முந்தக் காய்ச்சிக் கொள்வீரால்
முதிர்ந்த அத்தி சுரம்போமே 190

இந்த அத்திச் சுரத்திற்குச் சரியான குடிநீரைச் சொல்லுகிறேன். அத்திமரத்தோல், சந்தனம், இருவேலி, பயறு, கடுக்காய், அதிமதுரம், கொத்துமல்லி, சுக்கு இவற்றை இடித்துத் தேவையான தண்ணீரிலிட்டு கொதிப்பித்து எட்டில் ஒன்றாய்க் குறுக்கிக் காய்ச்சிப் பருக அத்திச்சுரம் நீங்கும்.

217. இந்த சுரங்கள் மலமடைத்தால்
யிதமா மலம்போம் வகைகேளீர்
அந்தப் பயிறு கடுக்காயும்
மாராங் கொத்த மல்லிசுக்கு
முந்தக் காய்ச்சி யெட்டொன்றாய்
முடுக்கங்க்க் குடிக்க வல்லீராய்
வந்த சுரம்போ மலமடைப்பும்
மறுக்கா தென்றார் மாமுனியே 191

இவ்வகையான சுரங்களில் மலம் இறுகி மலச்சிக்கல் உண்டாகும். பயிறு, கடுக்காய், கொத்துமல்லி, சுக்கு இவற்றை முன் சொன்ன வகையில் குடிநீரிட்டுக் குடிக்க சுரமும் நீங்கி, அடைத்த மலசலமும் எளிதில் வெளியேறும்.

~~218~~. பெருகிய சிலேற்பனத் தோடு
பிணங்கியே வாதம் வந்தால்
கருதிய சன்னி வாதச்
சுரமெனக் காண லாகும்
நெகுதியே கையுங் காலும்
நெஞ்சுற னோகு மெங்க
மருவிய வயிறு தளவும்
வகைபடக் கழியு மென்றே 192

அதிகமான சிலேற்பனத்துடன் வாதமும் சேர்ந்தால் அது சன்னி வாத சுரம் என அறியலாம். இச்சுரத்தால், கை, கால், நெஞ்சு இவற்றில் வலி உண்டாகும். வயிறு தொடர்ந்து கழிந்து கொண்டிருக்கும்.

~~219~~. பங்கம் பாளை வேர்சுக்கு
பரந்த முத்தக் காசுடனே
யங்குள் செறியு மகில்வெட்டி
யளவாய்க் காய்ச்சி யிதுபருகி
பொங்கிக் கழியுஞ் சுரமெல்லாம்
பொல்லா நாற்ற மதுவிட்டு
சங்கைப் படாம விதுமீளுந்
தப்பா திதுவுஞ் சத்தியமே 193

பங்கம்பாளையின் வேர், சுக்கு, முத்தக்காசு, அகில் இவற்றை இடித்து நீர்விட்டு முறைப்படி குடிநீர் செய்து பருக கழிச்சலை ஏற்படுத்திய சன்னி பாத சுரம் நீங்கி, கழிச்சல் சீராகி, நாற்றமும் குறைந்து நலம் பெறலாம்.

220. பித்த சிலேற்பன சுரத்தின் குணம் ~~மருந்து~~:

பித்தமுஞ் சிலேற்ப மத்தாள்
    பிணங்கியே சுரங்கள் தோன்றி
சத்தியாய்க் குளிர்ச்சி குத்தல்
    தாகித்த விரும லீளை
மெத்தென வெதுப்புக் காட்டி
    வெந்திடு மகவாய்க் கண்ணும்
நித்திரை யத்து மேனி
    வெளுக்குநீர் பெருக்குந் தானே 194

பித்தமும், சிலேற்பனமும் சேர்ந்து சுரங்கள் தோன்றும். இதனால் உடம்பு குளிர்ச்சி அடையும். உடம்பு குத்தி குத்தி வலிக்கும். இருமல், ஈளை இவற்றுடன் உடம்பில் வெப்பம் ஏற்பட்டு சுரம் காயும். வாய் வேக்காடு உண்டாகும். கண் நித்திரையின்றித் தவிக்கும். மேனி வெளுத்து உடம்பில் நீர் பெருத்துக் காணப்படும்.

மருந்து

221. அத்திப் பட்டை தானெட்டு
    . . . வாழைப் பழங்கூட்டி
பொத்திப் பிடித்து பிழிந்துகொண்டு
புகலுஞ் சாறு அதுகொண்டு
பித்த சிலேற்பன வயிற்றிழிவு
    சுரமும் பேணித் தீரங்காண்
அடுத்த வாணை யுண்மையிது
    அடிப்பாய்ப் பாருங் கண்டீரே 195

அத்திப்பட்டையுடன் எட்டு வாழைப்பழம் சேர்த்துப் பிழிந்த சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். அதனைப் பருகிவர பித்த சிலேட்டும சுரங்கள், வயிற்றிழிவு இவை தீரும் என்பது திண்ணம்.

இதற்குப் பின் உள்ள பாடல்களும் உரையும் மூலத்தில் (original) உள்ளன.



அங்கும் பாடல்களுக்கு மட்டுமே தலைப்பு கொடுக்கப்பட வேண்டும்.

1. பக்கம் 4 பாடல் 33, 6 வரிகளே உள்ளன- முழுமையாக இல்லை.

2. பக்கம் 8 பாடல் 40, 7 வரிகளே உள்ளன. முழுமையாக இல்லை.

3. பக்கம் 12 பாடல் 49, 7 வரிகள் உள்ளன.

4. பக்கம் 36 பாடல் 98, 4 வரிகளே உள்ளன.

5. பக்கம் 69 பாடல் 163, 5 வரிகளே உள்ளன.

6. பக்கம் 76, பாடல் 177 4 வரிகள் உள்ளன.

7. பக்கம் 87 பாடல் 199 4 வரிகள் உள்ளன.

---

இதில் பல வகைப் பாடல்கள் உள்ளன.

1 - 195 வரை